# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 01 சனிக்கிழமை (16-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:20


# புலிகளுடன் பேச எடுத்த முடிவு குறித்து கதிர்காமர் வாஜ்பாய்க்கு விளக்கினார்!

## ஜஸ்வந்சிங்குடனும் சந்திப்பு

புதுடில்லி,டிசெம்பர்16

**நோர்வே அரசின் உதவியுடன் விடுதலைப் புலிகள் அமைப்புடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முடிவு குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் எடுத்துக் கூறியதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.**

இருவருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் இந்தியத் தரப்பு உத்தியோகபூர்வமாக நேற்று இரவுவரை வெளியிடவில்லை.

நேற்றுக் காலை இந்தியாவுக்கு இரு நாள்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு புறப்பட்ட கதிர்காமரை புதுடில்லி விமான நிலையத்தில் இந்திய அதிகாரிகள் வரவேற்றனர்.

முதலில் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கைச் சந்தித்து கதிர்காமர் உரையாடினார்.

☆ நோர்வே அரசின் உதவியுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தல்.

☆ இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுதல்.

☆ இலங்கையின் தற்போதைய நிலைமை.

☆ சார்க் நாடுகள் அமைப்பின் செயற்பாடுகள்.

ஆகியவை தொடர்பாக இருவரும கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் கதிர்காமர் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சுக்களை நடத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜயலத் மடுவுக்கு

கொழும்பு,டிசெ.16

வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மடு தேவாலயத்துக்கு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இன்று செல்கிறார்.

உள்ளூர் பத்திரிகையாளர் சிலர் சகிதம் அங்கு செல்லும் இவர் ஆலய வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் இன்றே கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று இரவு கொழும்பில் இருந்து புறப்படத் திட்டமிட்டிருந்த இவர் இன்று காலை மடுவை அடைவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஆலயங்களில் மணி அடிக்க தடைநீக்கம்!

வடமராட்சி,டிசெ.16

கோப்பாய்ப் பகுதியில் உள்ள சைவ ஆலயங்கள், தேவாலயங்களில அதிகாலை வேளையில் மணி ஒலிக்க படையினரால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மாவீர்தின

(12ஆம் பக்கம் பார்க்க)

## "ராகிங்" சித்திரவதைக்குள்ளான மாணவன் ஒருவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம்,டிசெ.16

'ராகிங்' சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் யாழ். பல்கலைக்கழக புதுமுக மாணவனான யோகானந்தன் மகினன் (வயது 23) யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர் ஒருவரால் இவர் 'ராகிங்' சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூர் கோயில் வீதியில

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'லங்கா முடித்த' கப்பலின் அடுத்த சேவை உடனடியாக இல்லை!

யாழ்ப்பாணம்,டிசெ.16

காங்கேசன்துறையிலிருந்து 'லங்கா முடித்த' கப்பல் திருகோணமலைக்கு மேலும் இரு தடவைகள் பயணிகள் சேவையை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதும் -

அந்தச் சேவை உடனடியாக இடம்பெற வாய்ப்பில்லை எனத் தெரியவந்தது.

தற்சமயம் காங்கேசன்துறையில் தரித்துநிற்கும் இந்தக் கப்பல் பயணிகளை ஏற்றாமல் நாளை புறப்படலாம் என்றும் -

நத்தார் கொண்டாட்டங்களையொட்டி நத்தார் தினத்தை அண்டியதாக இரு சேவைகளை நடத்தலாம் என்றும் - கூறப்பட்டது.

இந்தச் சேவையை எதிர்பார்த்து யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் ஆயிரக்கணக்கான பயணிகள் காத்திருப்பதாகக் கூறப்பட்டது. (இ-3)

## புலிகளுடன் நிபந்தனை அற்ற பேச்சு:

# அரசு தம்முடன் ஆலோசிக்காதது குறித்து அனுருத்தவுக்கு அதிருப்தியா?

கொழும்பு,டிசெ.16

தம்முடன் கலந்தாலோசிக்காமல் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை மேற்கொள்ள அரசாங்கம் தயாராவது குறித்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த அதிருப்தி கொண்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் தமது அதிருப்தியை நேரடியாக பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்காவிடம் தெரிவித்துள்ளார் என்றும்-

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் ஆரம்பிப்பது தொடர்பாக அமைச்சர் கதிர்காமர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து அனுருத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதிருப்தி தெரிவித்தார் என்றும் -

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தச் செய்தியை மறுக்கும் பாணியில் தகவல் தொடர்பு சாதன அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா

(12ஆம் பக்கம் பார்க்க)

## நத்தாருக்கு முன் படை நடவடிக்கை!

### அரசு திட்டமிடுகிறதாம்

கொழும்பு,டிசெ.16

நத்தார் கொண்டாட்டங்களுக்கு முன்னர் யாழ்.குடாநாட்டில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்வதாக படைத் தரப்பினர் தெரிவித்ததாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தாக்குதல்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன என்றும்-

அவை நத்தாருக்கு முன் பூர்த்தியடையாத பட்சத்தில் வருடமுடிவுக்குள் பாரிய நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்றும்-தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பகுதிகளை மீட்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது. (இ-3)

# இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறும் குடும்பங்களின் விவரங்கள் மீளாய்வு

## 25 சதவீதமானோருக்கு அது நிறுத்தப்படலாம்?

வலி.வடக்கு,டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறும் குடும்பங்களின் விவரங்கள் மீளாய்வு செய்யப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த மீளாய்வின் பிரகாரம் தற்போது நிவாரணம் பெறுவோரில் 25 சதவீதமான குடும்பங்களின் நிவாரணம் நிறுத்தப்படலாம் என அறியப்படுகிறது.

யாழ்மாவட்டத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான நிவாரணம் கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் அது தொடர்பான விவரங்கள் இதுவரை மீளாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை.

நிவாரணம் பெறுவோரின் விவரங்களை மீளாய்வு செய்ய வேண்டிய தன் அவசியம் குறித்து நேற்று முன்தினம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஆராயப்பட்டதாக அறியவருகின்றது. யாழ்.அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நிவாரணம் பெறும் குடும்பங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 15 ஆயிரம் பேரை படையில் சேர்க்க நடவடிக்கை

இராணுவத்துக்கு மேலும் 15 ஆயிரம் பேரைச் சேர்ப்பதற்கான ஆள் சேர்க்கும் நடவடிக்கையை இன்று அரசாங்கம் ஆரம்பிக்கின்றது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் காயமடைந்தவர்களின் இடங்களுக்கும்-

தப்பியோடிய படையினரின் இடங்களுக்கும் - புதியவர்களை நியமிப்பதற்காகவே இந்த ஆள் சேர்க்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

21 நிலையங்களில் இந்த ஆள் சேர்க்கும் பணி இடம்பெறவுள்ளது.

கிராம மட்டத்தில் பாரிய பிரசாரம் மேற்கொண்டு இந்த நடவடிக்கையை முன்னெடுக்க அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

படையில் சேரும் இளைஞர், யுவதிகளை உடனடியாகப் பயிற்சிக்கு அனுப்பும் ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது. (இ-3)

## மனித பாவனைக்கு உதவாத அரிசி: உடனடி விசாரணைக்கு டக்ளஸ் பணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மற்றும் களஞ்சியங்களில் இருந்து மனித பாவனைக்கு ஒவ்வாத அரிசி திள் பரிசோதனைக் குழுவால் கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கும்படி வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து யாழ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவிலில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் கல்முனையில் வைத்து விடுதலைப் புலிப் பிரதிநிதிகளிடம் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினரால் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த இந்தச் சடலத்தை படையினர் பொறுப்பேற்று குருநகர் இறங்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெடுமாறனும் ஆதரவாளர்களும் கைது!

சென்னை,டிசெ.16

தமிழீழப் போராட்ட ஆதரவாளர்களில் ஒருவரான ஈழவேந்தனை இலங்கைக்கு நாடுகடத்தியதைக் கண்டித்து சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனும் அவரது ஆதரவாளர்களான 120 பேரும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று இடம்பெறவிருந்த ஆர்ப்பாட்டத்தைப் பொலீஸார் தடைசெய்திருந்த போதிலும் -

அந்தத் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முனைந்த சமயமே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

நெடுமாறனைப் பொலீஸார் வலுக் கட்டாயமாக வானில் ஏற்றிச் சென்றதாகக் கூறப்பட்டது. (இ-3-6)

# பெரும்போக நெற்செய்கை வரட்சியால் கடும் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக பெரும் போக நெற்செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

பெரும் போகத்தில் 5 ஆயிரத்து 469 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கைக்குத் தேவையான போதியளவு மழைவீழ்ச்சி இல்லாமையினால் நெற் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ் வருடம் ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் மழைவீழ்ச்சி மிகக் குறைவாகக் கிடைத்துள்ளது. இந்த மழைவீழ்ச்சி பரம்பல் நெற்பயிரின் வளர்ச்சிக்குப் போதாமலுள்ளது.

நெல் மட்டம் வெடிக்கும் காலத்தில் மழைவீழ்ச்சி இல்லாமையாலும் மண்ணில் ஈரத்தன்மை இல்லாததாலும் நெல்மட்ட வளர்ச்சியும் குறைந்து காணப்படுகிறது.

தற்பொழுது வரட்சி நிலை தொடர்ந்து கொண்டிருப்பதுடன் மேலும் மழைவீழ்ச்சி கிடைக்காது விட்டால் நெல் விளைச்சலில் பாரிய தாக்கம் ஏற்படும்.

இதேவேளை கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் கால்நடைகளாலும் வரட்சி காரணமாகவும் சில இடங்களில் நெற்பயிர்கள் அழிந்துள்ளன.

இப்படி அவர் மேலும் கூறினார். (ஐ-5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 - 02 - 1924

மறைவு 28 - 12 - 1999

அமரர்

### பொன்னையா ஆறுமுகம்

(உரிமையாளர்: ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ், 20, பெரியகடை - யாழ்ப்பாணம்.)

திதி : 16.12.2000

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு - நீங்காது!
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவகலாத:
*மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

*15/1, முதலாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (81735)



## நன்றி நவில்கிறோம்



தோற்றம் 04 - 03 - 1943

மறைவு 06 - 12 - 2000

அமரர்

### செல்லையா மனுவேல்ராஜ்

06.12.2000 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தமையைக் கேள்வியுற்று, உதவி செய்தவர்களுக்கும், வெளி இடங்களில் இருந்து தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஞாபக ஆராதனை கானான் ஜெப ஆலயத்தில் நாளை 17.12.2000 காலை 9 மணிக்கு நடைபெறும். இந்த ஆராதனையிலும் மதிய போசனத்திலும கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

போதகர், ஊழியர்கள், மனைவி, பிள்ளைகள், ச.இரத்தினசாமி (மைத்துனர்).

*கானான் ஜெப ஆலயம்,*
*இருபாலை,*
*கோப்பாய்.* (81716)



**லஷ்சுமி சினிமா**
இணுவில்.
சிவா, மோகினி நடித்த
ஈரமான ரோஜாவே
இளையராஜாவின் இன்னிசையில நிறைந்த இனிய பாடல்கள்
(றீல்ஸ்) காட்சிகள் 10.30, 2.30 (பி.நே.)
(81741)

**ராஜா** யாழ்ப்பாணம்
அஜித் (இரு வேடம்)
சிம்ரன், ஜோதிகா,
விவேக்
மற்றும் பலரின் நடிப்பில்
வாலி
காட்சிகள்:10.30, 2.00 (பி.நே.)
(C/14247)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், ஜோதிகா நடித்த
S.J.சூர்யாவின்
குஷி
தினசரி - 11.00, 2.30 (பி.நே.)
18ஆம் திகதி முதல்
சுதந்திரம்
(81710)

**வாணி**
சுன்னாகம்
அளவையியல்
திரு.S.சயந்தன்
2000 A/L, 2001 A/L
மீட்டல் வினா-விடை
சனி,ஞாயிறு 5p.m
(81729)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1924 - 11 - 10

விண்ணில் 1999 - 12 - 27

### அமரர் நமசிவாயம் வாதவூரர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - அளவெட்டி வடக்கு)

திதி : 16.12.2000

அளவெட்டி தன்னில் உதித்து
மலையகம், வன்னி, யாழ்.மண்ணில்
நல் ஆசானாய் பணி புரிந்து
எமக்கு வாழ வழிகாட்டிய
அன்புத் தெய்வம் சிவபதமடைந்து
ஓராண்டு சென்றாலும் செல்லாது
எம் நினைவு எவ்வாண்டும் பிரார்த்திப்போம்
சாந்திபெற!

*மாவிலங்கை,*
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.* (81734)

- குடும்பத்தினர்.


## மரண அறிவித்தல்கள்

### இணக்கன் முருகேசு

குடாக்கனை சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட இணக்கன் முருகேசு (பிரன்சி, முருகன்) நேற்று (15.12.2000) வெள்ளிக்கிழமை மன்னாரில் காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், மாரிமுத்து, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, பூதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் செல்லையா, சின்னத்துரை, இராசம்மா, தங்கராசா, தர்மன், பாக்கியம், மகேஸ்வரி, மகாலட்சுமி, சோமசுந்தரம், பராசிங்கம், வவா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நாகலிங்கம், பூவாலசிங்கம், முத்தையா, முருகேசு, குணபாலசிங்கம், தெய்வானை, பார்வதி, புஸ்பமாலா, இராசாத்தி, இலட்சுமி, மைனா, யோகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மன்னாரில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவீத்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*109/8, சிவன் புது வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (81736)

தகவல்:
**மு.தங்கராசா** (மகன்)

### திருமதி இரத்தினசபாபதி கனகம்மா

அரியாலையைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி இரத்தினசபாபதி கனகம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், தவபாலன் (ஆசிரியர் - யா/கனகரத்தினம் ம.ம.வி.), வரதபாலன (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தகுமாரி, மிஸ்ரிகா ஆகியோரின் மாமியாரும், வியாளாச்சி, பாக்கியம் ஆகியோரின் சகோதரியும், சரஸ்வதி, பாக்கியம், ஐயாத்துரை, மயில்வாகனம், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.12.2000) சனிக்கிழமை 2.30 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*15, ஆடியபாதம் வீதி,*
*கல்வியங்காடு,*
*(காவேரி சீயாக்காய் நிலையம் முன்பாக)* (81742)

தகவல்:
**இ.தவபாலன்** (மகன்)

### விஜயராணி பஞ்சரெத்தினம்

தலையாழியைப் பிறப்பிடமாகவும், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயராணி பஞ்சரெத்தினம் அவர்கள் நேற்று (15.12.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இரகுநாதன் (கொக்குவில்), பரமேஸ்வரி (நல்லூர்), குணநாதன் (லண்டன்), ராசசூரியர் (ஜேர்மனி), ஸ்ரீதரன் (கனடா), ஜெயக்குமார் (நெதர்லாந்து) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.12.2000) சனிக்கிழமை வத்தளையில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (81740)

தகவல்:
**சுப்பிரமணியம் இரகுநாதன்** (சகோதரன்)


## கிறிஸ்மஸ், புதுவருட பண்டிகையை முன்னிட்டு

இறக்குமதி செய்யப்பட்ட:
- சாறிவககள்
- ரவுசர் துணிவகைகள் 250/- முதல் 550/- வரை
- BOX சேட்வகைகள்
- ஸ்கேட் அன் பிளவ்ஸ்
- பஞ்சாபி வகைகள்
- மிலேனியம் கவுண் புடைவைகள்
- திருமணப் பட்டுப் புடைவைகள்

அனைத்து அழகிய ஜவுளிகளின் ஆலயம்

# சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41,பெரியகடை, யாழ்ப்பாணம்.

(நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு சனி, ஞாயிறுகளிலும் விற்பனை உண்டு)

(c/14316)

யாழ்ப்பாணம்

# உதயன்

## தடுப்பார்களா?

குடாநாட்டு மக்களின் பெரிய ஆஸ்பத்திரியாக விளங்கும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் அவலநிலை — தட்டுப்பாட்டு நிலை — பற்றாக்குறைநிலை — குறித்து முன்னரும் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்; இரண்டு வாரங்களுக்கு முன்பதாக.

மக்களுக்குரிய வைத்திய சேவையை யாழ். ஆஸ்பத்திரி சரிவரச் செய்யமுடியாத நிலை தொடர்ந்ததால் அங்கு பணிபுரியும் வைத்திய நிபுணர்களும், சத்திரசிகிச்சை நிபுணர்களும், நோயாளருக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கமுடியாதிருப்பது குறித்து ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியிருந்தனர்.

இப்போது யாழ் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் வைத்தியர்கள், தமது சங்கத்தில் — அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளையில் — எடுத்த தீர்மானத்துக்கு அமைய, யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர்ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் உள்ள விவரத்தின் பிரகாரம், யாழ்ப்பாண மாவட்டத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களுக்கான ஆளணியினரில் 40 சதவீதமானோரே சேவையில் உள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பணிக்கு அமர்த்தப்பட வேண்டிய வைத்திய அதிகாரிகள் வைத்திய நிபுணர்களின் வெற்றிடங்கள் வருடாந்தம் அதிகரித்து வருகின்றது. அந்த வெற்றிடங்கள் முழுமையாக மறைக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. எட்டு வெற்றிடங்கள் மட்டுமே உள்ளதாக அரசாங்கத் தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் டாக்டர்கள் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக பல கஷ்டங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் தமது கடமையைச் செய்துவருபவர்கள். இங்கு பணிபுரிந்த பலர் வசதிகளையும் வருவாய் மூலங்களையும் எதிர்பார்த்து குடாநாட்டை விட்டுச் சென்றதை மக்கள் அறிவார்கள்.

இத்தகையதொரு பின்னணியில்— தென்னிலங்கையில் இருந்து வந்து வடக்கு — கிழக்கில் பணிபுரியும் டாக்டர்களுக்கு வழங்கும் சலுகைகளையும் மேலதிகக் கொடுப்பனவுகளையும் ஏற்கனவே இங்கு பணிபுரியும் டாக்டர்களுக்கு வழங்க அரசாங்கம் மறுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை, இங்கு பணிபுரியும் வைத்தியர்கள் மத்தியில் பெரும் வேதனையையும் ஏமாற்றத்தையும் உண்டாக்கி உள்ளது. அரசாங்கத்தின் இந்தப் பாரபட்சமான நடத்தை யாழ். மாவட்டத்தில் இப்போது பணிபுரியும் டாக்டர்களையும் வெளியிடங்களுக்குச் செல்வதற்கு உந்துவதாக உள்ளது.

அதனால் குடாநாட்டில் பணிபுரியும் டாக்டர்களின் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சி அடைந்துவிடும் ஆபத்து உண்டு. அரசின் இந்தப் பாகுபாடான நடவடிக்கை குடாநாட்டு மக்களுக்கான வைத்திய வசதிகளை வேண்டுமென்றே சீரழிக்கும் "சதி"க்குச் சமனாகும்.

தமது மக்களின் நலன்கருதி கஷ்டங்களின் மத்தியிலும் பணியாற்றும் குடாநாட்டு டாக்டர்களின் சேவை பாராட்டப்பட வேண்டியது. அவர்களின் மனங்களை வேதனை அடைய வைத்துள்ள அரசாங்கத்திடம் இருந்து அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பது இப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலையாய பொறுப்பு. மக்கள் நலனில் அக்கறையுள்ள மக்கள் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வோர், டாக்டர்கள் மேலும் வெளியேறும் ஆபத்தைத் தடுப்பார்களா?

# உள்ளூராட்சி ஊழியர்கள் சிலருக்கு இடர்க்காலப்படி வழங்கப்படவில்லை

தென்மராட்சி, டிசெ. 16

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச, உள்ளூராட்சி ஊழியர்களுக்கு வழங்குவதாக அரசினால் அறிவிக்கப்பட்ட 1999 ஜூலை தொடக்கம் டிசெம்பர் வரையான ஆறுமாத காலப்பகுதிக்குரிய இடர்க்காலக் கொடுப்பனவு யாழ். மாவட்டத்தில் உள்ள சில உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

இந்தக் கொடுப்பனவு வழங்குவதற்கான சுற்றறிக்கை 1999 நவம்பர் மாதத்தில் உள்ளூராட்சி அலுவலகங்களுக்குக் கிடைத்த போதிலும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள சில அம்சங்கள் கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலையை உருவாக்கி உள்ளதால் ஒரு வருடமாகவும் இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காலப் பகுதிக்குரிய இடர்க்காலக் கொடுப்பனவுகள் யாழ். சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-117)

## 146 தபால் பொதிகளே வந்தன

யாழ்ப்பாணம், டிசெ. 16

நேற்றைய தினம் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த லங்கா முடித்த கப்பலில் வெளியூர்த் தபால்கள் அடங்கிய 146 பொதிகள் மட்டுமே எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் 159 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் யாழ். பிரதம தபாலகத்துக்கு 146 தபால் பொதிகள் மட்டுமே எடுத்து வரப்பட்டுள்ளன என்று யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-6)

## சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்பு

நெல்லியடி, டிசெ. 16

இரவு வேளை கசிப்பு அருந்தச் சென்ற வயோதிபர் ஒருவர் மறுநாள் அதிகாலை மரம் ஒன்றில் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் கரவெட்டி மேற்கு இராசகிராமத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்தவரான ஆழ்வான் குண்டுமணி (வயது 85) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார், மந்திகை மருத்துவ மனையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (இ-109)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.16

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு மனோகரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற இருக்கின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக அதிகாரி ஏ. எம். ஜோசப் பங்குபற்றுவார்.

பிற்பகல் 2-30 மணிக்கு இடம்பெறும் காட்சி ஆட்டத்தில் றேஞ்சஸ் வி. கவும் யங் லயன்ஸ் வி. கவும்—

பிற்பகல் 3-30 மணிக்கு இடம்பெறும் இறுதி ஆட்டத்தில் டொல்பீமர்ஸ் வி.கவும் அல்வாய் நண்பர்கள் வி. கவும்— மோதுகின்றன. [இ-3]

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இறுவில் அல்வாய் விளையாட்டுக்கழகத்தால் அமரர் வ. நல்லதம்பி ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கைதடி வளர்மதி வி. கழகமும் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ வி. கழகமும் மோதுகின்றன. [இ86]

# 40.5 ஹெக்டேயர் பரப்பில் உருளைக்கிழங்குச் செய்கை

யாழ்ப்பாணம், டிசெ 16

யாழ். மாவட்டத்தில் 40.5 ஹெக்டேயரில் உருளைக்கிழங்கு நடுகை செய்யப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் 97.5 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு தனியார் துறையினரால் எடுத்துவரப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

விதை உருளைக் கிழங்கினைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளில் மேலும் பலர் உருளைக்கிழங்கு நடுகைக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்

புத்தூரில் 2 ஹெக்டேயரிலும், உரும்பிராயில் 5 ஹெக்டேயரிலும் உருளைக்கிழங்கு நடுகை செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (ஐ-5)

# கப்பலுக்கு ரிக்கெட் பெற அலையும் பயணிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 16

அடுத்து இடம்பெற உள்ள லங்கா முடித்த கப்பலில் பயணம் செய்வதற்கு ரிக்கெட் பெறும் நோக்கத்துடன் கடந்த இரு நாள்களாக நூற்றுக்கணக்கான பயணிகள் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

தூர இடங்களிலுள்ள பயணிகள் முதல் நாள் இரவு வந்து யாழ். நகரில் தங்கியிருந்து அடுத்த நாள் அதிகாலையில் கியூவுக்குச் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

கப்பல் பயணம் தொடர்பான அறிவித்தல்கள் வெளியிடப்படாதபோதும் பயணிகள் ரிக்கெட் வழங்கப்படலாம் என்ற எதிர்ப்பார்ப்பில் அலைந்து கொண்டிருக்கிறார்கள்,

கடந்த இரு நாள்களாக அதிகாலை வேளைகளில் யாழ் நகரிலுள்ள மணியம் கட்டடம் மற்றும் ரயில் நிலையப் பகுதிகளில் நூற்றுக் கணக்கான மக்கள் கியூ வரிசையில் காத்திருந்தனர்.

அதிகாரிகள் வந்து ரிக்கெட் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கும் வரை காத்திருந்து விட்டு பயணிகள் ஏமாற்றத்துடன் செல்கிறார்கள். (இ-5)

# கைதான மாணவன் பரீட்சை எழுத அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 16

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட மாணவன் ஒருவர் ஜி.சி.ஈ. (சாதாரணதர) பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

கடந்தமாதம் 19 ஆம் திகதி வல்வெட்டித்துறைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட மட்டுவில் கமலாசினி வித்தியாலய மாணவனான சுபாரட்ணம் இளையராஜா (வயது 18) என்பவருக்கே பரீட்சை எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைப் பொலீஸாரால் பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் எஸ். குமாரசாமி முன்னிலையில் பிரஸ்தாப மாணவன் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை யாழ். சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்குமாறு பொலீஸாரைப் பணித்த நீதிவான் அவர் பரீட்சை எழுதுவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இதன்பேரில் குறிப்பிட்ட மாணவன் சிறைச்சாலையில் இருந்து தினமும் கூட்டிவரப்பட்டு வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் பரீட்சை எழுதி வருகிறார். (இ-10-117)

## முதலாவதுதொகுதி விடைத்தாள்கள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், டிசெ. 16

தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜி.சி.ஈ. [சாதாரணதர] பரீட்சையின் முதலாவது தொகுதி விடைத்தாள்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை விமான மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாக யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [இ-19]

## நாளை

மார்கழி 02
ஞாயிற்றுக்கிழமை
திதி: ஸப்தமி
பின் இரவு 12.30 வரை.
நட்சத்திரம்: பூரம்
பின் இரவு 1. 28 வரை.
சுபநேரம்: 9.23-10.53
ராகுகாலம்: 4.53 - 6.23
(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

### உதயவாக்கு

நாம் செல்வங்களைக் குவிக்கிறோம், எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கப் போவது போல்.

-பிரான்ஸ் பழமொழி

## இன்று

சாவகச்சேரி, டிசெ. 16

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவைச் சேர்ந்த தொண்டர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனி காலை 10 மணிக்கு துன்னாலை அல்லையம்பதி முருகன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. சகல தொண்டர்களையும் சமுகமளிக்கும்படி சங்கத்தின் சாவகச்சேரிப் பிரிவுத் தலைவர் செ. மகேஸ்வரன் கேட்டுள்ளார். (இ-31)

★ ★ ★

கொழும்புத்துறை, டிசெ. 16

யாழ். செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் கிறிஸ்தவக்கழகம் நடத்தும் வருடாந்த நத்தார் விழா இன்று சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். கில்னர் மண்டபத்தில் நடைபெறும். (இ-30(

★ ★ ★

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் பழமர நடுகையும் பராமரிப்பும் தொடர்பான பயிற்சிப் பட்டறை இன்று காலை 10 மணிக்கு கரணவாய் மேற்கு கதாதரனின் தோட்டத்தில் நடைபெறும்.

ஆர்வம் உள்ளவர்களைச் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

★ ★ ★

கரணவாய் வடக்கு ஸ்ரீ அம்பாள் அறவழி மழலைகள் பூங்காவின் கலைவிழா இன்று சனிக்கிழமை நடைபெறும்.

அறவழிக் குழுத் தலைவர் கே. தங்கவேல் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக கரணவாய் வடக்கு கிராம சேவையாளர் எஸ். மகாதேசன் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் எஸ். இரத்தினவடிவேல், எம். சத்தியநாதன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். (இ-15)

★ ★ ★

வலிகாமம், தெற்கு டிசெ. 16

வடக்கு—கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் எழுதுவினைஞர்களுக்கான நான்கு நாள் முகாமைத்துவ பயிற்சிநெறி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் பயிற்சி நெறியின் முதலாவது தொகுதி 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை தற்போது திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சித் திணைக்களத்தில் நடைபெற்று வருகின்றது.

இதன் இரண்டாவது தொகுதி பயிற்சி நெறி நெல்லியடியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியில் உள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றும் எழுதுவினைஞர் தரம் ii ஆவைச் சேர்ந்த ஊழியர்கள் இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள உள்ளனர்.

பயிற்சி நெறியில் கலந்து கொள்வோருக்கான நியமனக் கடிதங்கள் பிராந்திய ஆணையாளரால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நியமனக் கடிதம் கிடைக்கத் தாமதமானாலும் மேற்படி தரத்தைச் சேர்ந்த எழுதுவினைஞர்கள் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள முடியும் எனவும் பிராந்திய ஆணையாளர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறியின் மூன்றாவது பகுதி வலிகாமம் பிரிவைச் சேர்ந்த எழுதுவினைஞர்கள் ii ஆம் தரத்தைச் சேர்ந்தவர்களுக்காக இம்மாதம் 18 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. (இ-5-152-31)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் கிளை முகாமையாளராகக்
கடமையாற்றி வரும் தோழர்

**திரு. பொ. யோகரத்தினம்**
அவர்களின் அன்புப் புத்திரி

## செல்வி சிந்துஜா

இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையுறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவரின் குடும்பத்துக்கு ஆறுதல் அளிக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை—நல்லூர்.

(81726)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14 — 09 — 1946

மறைவு
28 — 12 — 1999

உடுப்பிட்டியூர்
அமரர்

## புவிராஜரட்ணம் திருஞானசம்பந்தன்

(கூட்டுறவுப் பதிப்பகம், யாழ். ப. நோ. கூ. சங்கம்)

திதி: 16 — 12 — 2000

அன்புக்கு இலக்கணமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசமெனும் நீரூற்றி
எம்மை அரவணைத்த தெய்வமே!
வருடமொன்று சென்றாலும்
அகலாது உங்கள் நினைவு
வற்றாத கண்ணீருடன்
நாம் இங்கு வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்

"பொன்னா வில்லா"
இமையாணன்,
உடுப்பிட்டி.

(81651)

# பாலர் ஒன்றுகூடல்

வலிகாமம் தெற்கு, டிசெ. 16

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் உடுவில் கிழக்கு பாலர்பாடசாலை மாணவர்களின் ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் செ. சிவராசா தலைமையில் நடைபெறும்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் த. தேவராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

உடுவில் இந்து இளைஞர் மன்றச்செயலாளர் த. ஈஸ்வரமோகன், உடுவில் முருகன் பந்தல் சேவை உரிமையாளர் ம கதிர்காமதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கலும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(ஐ-152)

# கூ. சங்கத்துக்கு கட்டடம் அமைக்கப்படும்

சண்டிலிப்பாய், டிசெ. 16

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்கு புதிய பணிமனைகட்டடம் ஒன்றை நிறுவுவதென்று சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

சங்கக்களஞ்சிய அறையுடன் கூடியதாக இக் கட்டடம் அமையும் என்றும் இதற்கான நிதியினை ஒதுக்கித் தருமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ஐ-135)

# இடைக்காலப்படி வழங்கப்படுகிறது

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு விடுத்திருந்த சுற்றறிக்கையின்படி 400 ரூபா இடைக்காலப் படி வழங்கப்பட்டு வருகின்றது கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் இக் கொடுப்பனவு நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் மா. செல்வராசா தெரிவித்தார். (ஐ-135)

# பரீட்சை நிலையப் பணியாளரது கொடுப்பனவுகள் அதிகரிப்பு

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சையின் பரீட்சை நிலையப்பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மாற்றம் செய்யப்பட்டுள்ள அதிகரித்த கொடுப்பனவுகளுக்கமைய பரீட்சை இணைப்பு நிலைய அலுவலர்களுக்கு நாளொன்றுக்கு 350 ரூபா வழங்கப்பட உள்ளது.

உதவி நிலைய அலுவலர்களுக்கும் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கும் 275 ரூபாவும், நிரந்தர நோக்குநர்களுக்கு 225 ரூபாவும், நோக்குநர்களுக்கும், இணைப்பு நிலைய சிற்றூழியர்களுக்கும் 200 ரூபாவும், பரீட்சை நிலைய சிற்றூழியர்களுக்கு 160 ரூபாவும் நாளொன்றுக்கு வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பந்தியின் உறுப்பினரான

## திரு. ஞானப்பிரகாசம் அருளானந்தம்

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக யாழ். நீதிமன்றில் 08 - 12 - 2000 அன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர் சேவை திறம்பட அமைய
இறைவனை வேண்டுகின்றோம்.

ஆன்ம ஆலோசகரும், உறுப்பினர்களும்,
புனித சூசையப்பர் பந்தி,
புனித வின்சன் டீபோல் சபை.

புனித மரியன்னை பேராலயம்.
யாழ்ப்பாணம்.

(81678)

# விற்பனைக்கு

2001 ஆம் ஆண்டுக்கான தரமான வர்ண சுவாமிப்படக் கலண்டர்கள், பொக்கற் கலண்டர்கள் மற்றும் Canon 1215 பிரதி இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் Canon Sharp Toner விற்பனைக்குண்டு.

தொடர்பு:
குமரன் விடுதி,
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(81719)

# மரண அறிவித்தல்கள்

## Mrs. L. S. A. RAJAH (அதி அக்கா)

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

திருமதி L. S. A. இராசா (ஓய்வுபெற்ற ஆசிரியை) 11 - 12 - 2000 அன்று காலை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-12-2000) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
வே. இராசா
(கணவன்)

"அன்பகம்"
உடுப்பிட்டி.

(81730)

## துரைச்சாமி சச்சிதானந்தன்

(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தன் அவர்கள் 14—12—2000 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி-சிவகாமிஅம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், சசிவதனி (சித்த மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்), வாசுகி (மிருக வைத்திய பீடம், பேராதனை), கௌரி (கல்வியற் கல்லூரி, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகநாதன், ஞானசோதி (கனடா), வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நமசிவாயம் (கனடா), சரோஜினிதேவி, சுலோஜனாதேவி காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேந்திரன், விஜீந்திரன், சசிந்திரன், ஜெயந்திரன், ஸ்ரீரகுகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷினி, சுஜந்தன், சுகிதரன் ஆகியோரின் அன்பு சிறியதகப்பனாரும் மற்றும் சுலோஜன், சேந்தன், விஜிந்தன் ஆகியோரின் அன்பு பெரியதகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நாளை (17—12—2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. லோகநாதன்
(சகோதரன்)

4th Floor Apartment,
No. 5 4/6, Frances Rd,
Colombo — 6
T. P. 596209

(81724)

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி.

# மீள் கேள்வி அறிவித்தல் - 2001

கேள்விப் படிவங்கள் வழங்கல்:- 21-12-2000 நண்பகல் 12. 30 மணி வரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளல்:- 22-12-2000 முற்பகல் 10. 30 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் நேரம்:- 22-12-2000 முற்பகல் 10. 45 மணி

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| | சந்தைகள் / இறைச்சிக்கடைகள் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை இல. 03 | 150/- | 3000/- | 220000/- |
| 2. | அந்திரான் சந்தை | 150/- | 500/- | 26710/- |
| 3. | நவிண்டில் சந்தை | 200/- | 500/- | 11260/- |
| 4. | உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 150/- | 2000/- | 220000/- |
| 5. | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 7000/- |
| 6. | துன்னாலை வடக்கு சந்தை | 100/- | 500/- | 1000/- |
| 7. | அல்வாய் தெற்கு சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 25000/- |

வ. நடராசா ஜே. பி.
தலைவர்
வடமராட்சி தெற்கு மேற்குப்
பிரதேச சபை, கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்குப்
பிரதேச சபை, கரவெட்டி.
11—12—2000

[சி/14314]

# சிறுவர் மேம்பாட்டுப் பணிக்கென பிரதேச செயலகங்களுக்கு நிதி

## 'யுனிசெவ்' வழங்குகிறது

வலி.வடக்கு,டிசெ.16

ஐநாவின் 'யுனிசெவ்' நிறுவனத்தினால் அடுத்தாண்டு முதல் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் 61ஆயிரத்து ஐநூறு ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் நூறு பிள்ளைகளுக்கு தலா இருநூற்று முப்பது ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

ஊனமுற்ற 20 பிள்ளைகளுக்கு தமது ஆற்றலை மேம்படுத்த வசதியாக 350 ரூபாவுக்கு உடல் அங்கவீனமானவர்களுக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப் பணம் வழங்கப்படவுள்ளது.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாத 150 பிள்ளைகளுக்கு அதனைப் பெறுவதற்கு வசதியாக நூறு ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

மற்றும் ஒரு தொகுதியினருக்கு பாடசாலை உபகரணங்கள், காகிதாதி வகைகள் கொள்வனவு செய்வதற்கும் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இந்நிதி ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவு மட்டத்திலும் உள்ள இணைப்புக் குழுக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. (ஐ-86)

# மத்திய கிழக்கு நாடுகளில் உயிரிழக்கும் இலங்கையர் எண்ணிக்கை அதிகரிப்பு

## சடலங்களை எடுத்து வருவதில் தாமதம்

கொழும்பு,டிசெ.16

மத்திய கிழக்கு நாடுகளில் கடமை புரியும் இலங்கையர்கள் அங்கு உயிரிழக்கும் பட்சத்தில் அவர்களின் சடலங்களை இலங்கைக்கு எடுத்து வருவதில் உறவினர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரணம் ஏற்பட்டதற்கான காரணங்களை அறிவதிலும் மற்றும் மரண அத்தாட்சிப் பத்திரங்கள், நிவாரணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதிலும் உள்ள சிரமங்கள் பற்றியும் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது 10 இலட்சம் இலங்கையர்கள் மத்தியகிழக்கு நாடுகளில் பணியாற்றி வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் கடந்த ஆண்டில் மட்டும 82 ஆண்களும் 80 பெண்களும திடீரென அங்கு மரணமடைந்துள்ளனர் என்று வெளிநாட்டுப் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை 75 பெண்களும் [illegible] ஆண்களும் உயிரிழந்திருப்பதாக மேற்படி ஸ்தாபனத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சடலங்களை எடுத்து வருவதில் உள்ள தாமதம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி ஸ்தாபனம் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

அங்கு இறப்பவர்களின் மரணச் செலவுக்கு தலா 10ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது. (ஐ-10)

### நல்லூரில் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

இடம்பெயர்ந்தோருக்கான 2ஆயிரம் ரூபா கொடுப்பனவு நல்லூர் பிரதேச செயலகத்தால் 887 குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையினால் நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வரும் இக்கொடுப்பனவு ஒரு பகுதியினருக்கு நேற்றைய தினம் வழங்கப்பட்டது.

ஏனையோருக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் என நல்லூர் பிரதேச செயலர் க.குணராசா தெரிவித்துள்ளார். கொடுப்பனவுக்குரியவர்கள் தாங் கள் இடம்பெயர்ந்து வசிக்கும் கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் சமுகம் அளித்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-173)



உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தால் கடந்த 3ஆம் திகதி 'கலைத் தென்றல்' நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அந் நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி இ.குட்டித்தம்பி உரையாற்றுவதையும் 'கலாபூஷணம்' நா.நவாலியூர் செல்லத்துரை கல்லூரி ஆசிரியரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் படத்தில் காணலாம். பழைய மாணவிகள் சங்கத் தலைவி திருமதி லி.நே. யோசப்பும் படத்தில் உள்ளார். (ஐ)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தில் புதிய மத்தியஸ்தர்களை இணைக்கும் நோக்குடன் வருடாந்தம் நடத்தப்படும் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்கான துடுப்பாட்ட விதிகள் தொடர்பான பயிற்சி விரிவுரைகள் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்த விரிவுரை வகுப்புக்கள் தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 10.30 முதல் 11.30 மணி வரை நடைபெறும்.

இந்த விரிவுரை வகுப்புகளில் ஒழுங்காக சமுகமளிப்பவர்கள் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர் என்றும் -

சித்தியடைபவர்கள் விசேட பயிற்சியின் பின் மத்தியஸ்தர்களாக செயற்பட அனுமதிக்கப்படுவர் என்றும் -

விரிவுரையில் பங்குபற்ற விரும்புவோர் விரிவுரை ஆரம்ப நாளான இன்று போதனாசிரியர் ஆர்.செல்வராஜாவுடன் தொடர்பு கொள்ளும்படியும் மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் எஸ்.சிறீகாந்தன் கேட்டுள்ளார்.

இதேவேளை-

யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் சகல உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 10.30 மணிக்கு, யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலுக்கு சகல மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மத்தியஸ்தர் சங்க செயலாளர் கேட்டுள்ளார். (ஐ)

# வழுக்கை ஆற்றுப் படுக்கைப் பிரதேசம் அடுத்த வருடம் அபிவிருத்தி செய்யப்படும்

## குளத்திறப்பு விழாவில் நீர்ப்பாசனப் பகுதி அதிகாரி

சண்டிலிப்பாய்,டிசெ.16

"நோர்வே நாட்டின் 'நோராட்' நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக 15 கோடி ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது. விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் இத்திட்டத்தில் வழுக்கை ஆற்றுப் படுக்கைப் பகுதியின் அபிவிருத்தி திட்டமும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. வழுக்கை ஆற்றோடு தொடர்புடைய குளங்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றின் புனரமைப்பும், அணைகள், பாலங்கள், தூரிகள் என்பன அமைப்பதும் இத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளன."

சங்கரத்தைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முதலியார் குளத்தின் திறப்பு விழா கடந்த புதன் கிழமை நடைபெற்றபோது அதில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு - கிழக்கு மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி எஸ்.செல்வரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.வ. மா.க. முதலியார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் எந்திரி செல்வரத்தினம் குளத்தின் பெயர் பலகையை திரை நீக்கம் செய்து வைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

நீர்ப்பாசனத் திணைக்களம் யாழ். மாவட்டத்தில் குளங்களைப் புனரமைப்பதற்கும் ஆழமாக்குவதற்கும் பயன்படுத்துவதற்காக இரண்டு புதிய புல்டோசர்களைக் கொள்வனவு செய்வதற்கு 14இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதுடன் விரைவில் இவற்றை கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது.

நான் இங்கு நேரில் வந்து அவதானித்த பின்பு இப்பிராந்தியத்தில் மேலும் பல குளங்களை நிறுவி நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்த முடியும் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. விவசாயிகள் தங்கள் பகுதியிலுள்ள குளங்கள் பற்றியும், அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்தும் தங்கள் ஆலோசனைகளை எமது திணைக்களப்' பிராந்திய அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். தலைமை அலுவலகத்தில் வைத்து திட்டங்களை தயாரிப்பதை விடுத்து மக்களுடன் - பயனாளிகளுடன் - கலந்து ஆலோசித்துத் திட்டங்களைத் தயாரிக்கும் புதியதொரு நடைமுறை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் தெரிவிக்கும் நீர்ப்பாசனத்திட்டங்களை ஆராய்ந்து அவற்றை நிறைவேற்றுவதற்கு இங்குள்ள எமது பொறியியலாளர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் - என்றார்.

யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

விவசாயம் மேற்கொள்ளுவதற்கு நீர் மிகவும் முக்கியமானதாகும். கிணறுகள், கேணிகள், குளங்கள் ஆகியவற்றில் மழைகாலத்தில் பெய்யும் மழை நீரை தேக்கி வைப்பதன் மூலம் வரண்ட பகுதிகளிலும் விவசாயம் செழிப்படைய வாய்ப்பு ஏற்படுகின்றது. இம்முறை மாரி மழை மிகவும் குறைவாக பெய்துள்ளதால் நெற்பயிர்ச்செய்கைக்கு பெரும் பாதிப்பு யாழ்.மாவட்டத்தில் பல இடங்களிலும் ஏற்பட்டுள்ளது. எமக்குக் கிடைக்கக் கூடிய மழை நீரை வீணாக விடாது தேக்கி வைத்து பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இப் புதிய குளத்தின் தோற்றம் இக்காலகட்டத்தில் மிகவும் அத்தியாவசியமானதாக உள்ளது. இதற்காக முயற்சி மேற்கொண்டவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது.

### மரங்கள் அழிப்பு

எமது மாவட்டத்தில் பாரிய மரங்கள் அழிக்கப்பட்டு வருவதும் மழை வீழ்ச்சி குறைவடைவதற்குக் காரணமாக உள்ளது. பனைகள், தென்னைகள் , வேம்புகள் உட்பட பல மரங்கள் கண்டபடி தறிக்கப்படுகின்றன. அழிக்கப்பட்டு வரும் மரங்களுக்கு பதிலாக வனவளத் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை எமது விவசாயத் திணைக்களம் நடுவதற்கு திட்டமிட்டுள்ளது. புலோலி, கரணவாய்ப் பகுதியிலும், வட்டுக்கோட்டை, கொட்டைக்காடு என்ற இடத்திலும் அண்மையில் தேக்கு மரங்களும் கொய்யா மரங்களும் நடப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 'பாதீனியம்' களை மிக வேகமாக பரவிவருகின்றது. பயிர்ச்செய்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தவல்ல இதனை முற்றாக அழித்து ஒழிப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றார்.

யாழ்.கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் உரையாற்றுகையில் -

இக்குளம் திறந்து வைக்கப்படும் இந்த நாள் ஒரு பொன்நாள். நீண்ட காலமாக இங்கு ஒரு குளத்தைப் புதிதாக நிறுவவேண்டும் என்று விவசாய சம்மேளனத் தலைவர் முதலியார் மேற்கொண்ட முயற்சி இன்று கைகூடியுள்ளது. இக்குளத்தின் மூலம் இப்பகுதியில் காலபோக நெற்செய்கை மற்றும் சிறு போக நெற்செய்கை, உப உணவுப் பயிர்ச்செய்கை ஆகியவற்றை மேற்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது. இயந்திர வசதி எதுவும் இங்கு இல்லாத நிலையில் மனித வளத்தை - மனித சக்தியைக் கொண்டு இக்குளம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது குறிப்பிட வேண்டியது ஒன்றாகும் - என்றார்.

### 'விவசாய வித்தகர்' பட்டம்

அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவரும், யாழ்.சமூக அபிவிருத்தி மன்ற தலைவருமான த.கந்தையா உரையாற்றுகையில் -

பொதுநல சேவை செய்பவர்கள் குறைந்து வரும் இக்காலகட்டத்தில் முதலியார் முன்னின்று பல பொதுப் பணிகளை ஆற்றி வருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. அவருக்கு 'விவசாய வித்தகர்' என்ற பட்டத்தையும் இங்கு வழங்குகின்றேன். அத்துடன் பொன்னாடை ஒன்றையும் போர்த்துகின்றேன் - என்றார்.

யாழ்.நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் ரி.கணேசராசா உரையாற்றுகையில் -

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல்வேறு குளங்களையும் விவசாய அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கு எமது திணைக்களம் . திட்டமிட்டுள்ளது. குறிப்பாக வழுக்கையாற்றுப் பிரதேசத்தில் உள்ள 5 முக்கிய குளங்களை புனரமைப்புச் செய்யவும் வாய்கால்களுக்கு அணைகளைக் கட்டவும் எதிர்வரும் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன் கல்லுண்டாய்ப் பகுதியில் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டிருப்பதால் அதனைத் தடுத்து அணை கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது - என்றார்.

நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவரும், மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருமான மா.செல்வராசா உரையாற்றுகையில் -

கல்லுண்டாய்க் கடற்கரைப் பகுதியில் முன்பு உப்பளம் இருந்த இடத்தில் முன்னர் போடப்பட்ட மண் அணையில் இருந்து ஊரிமண் கண்டபடி வெட்டி உழவுஇயந்திரப் பெட்டிகளில் கொண்டு செல்லப்பட்டு வருவதால் கடல் உப்பு நீர் விவசாயக் காணிகளுக்குள் புகுந்து வருகின்றது. இதனை உடனடியாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத் தலைவரும், பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவருமான ச.செல்வரத்தினம் உரையாற்றுகையில் -

பண்டத்தரிப்பு தவிட்டுக்குளம், அந்திரான் வாய்க்கால் என்பன புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். இதன் மூலம் மழை நீரைத் தேக்கி வைத்து விவசாயத்திற்கு பயன்படுத்த முடியும் - என்றார்.

உடுவில் கமநல கேந்திர பிரிவு விவசாயிகள் சமாஜத் தலைவர் எஸ்.திருக்குமார், யாழ்.நீர்ப்பாசனத் திணைக்கள உதவிப் பொறியியலாளர் கே.முருகதாஸ் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். சம்மேளனத்தின் உப தலைவர் சி.வே.பரமேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினார். (ஐ-135)

### கல்வி ஊக்குவிப்பு போட்டி

காரைநகர்,டிசெ.16

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை முன்பள்ளி மாணவர்களுக்கிடையே மாதாந்தம் நடத்தும் கல்வி ஊக்குவிப்புப் போட்டிகளில் டிசெம்பர் மாதத்துக்கான போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் வாரிவளவு நல்லியக்கச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

காரைநகரில் உள்ள பாலர் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளும் இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு அமரர்கள் சுப்பிரமணியம், நேசரத்தினம் ஆகியோரின் ஞாபகார்த்தப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக வாரிவளவு நல்லியக்கச் சபை செயலர் எஸ்.பத்மநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-73)

### தொலைக்கல்வி தொடர் வகுப்புகள்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக்கல்விப் பயிற்சி நிலையத்தில் 1999-2001ஆம் ஆண்டுக்கான தொலைக் கல்வி பயிற்சி நெறிக்கான தொடர் வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு நடைபெறுமென சிரேஷ்ட போதனாசிரியர் ச.சரவணமுத்து அறிவித்துள்ளார்.

பயிற்சி பெறும் மாணவர்களுக்குரிய பதிவு இலக்கம் தேசியகல்வி நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளதாகவும் - சகல மாணவர்களும் நேரில் வருகை தந்து அதனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியின் முதலாம் பகுதிக்குரிய பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறும்.

இதேவேளை -

யாழ்.மாவட்டத்தில் 1993ஆம் ஆண்டிலிருந்து தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெற்று இறுதிப் பரீட்சையின் Iஆம், IIஆம் பகுதிகளுக்குத் தோற்றி இதுவரை பரீட்சை பெறுபேறு மற்றும் சான்றிதழ், சம்பள மீளாய்வுக் கடிதம் என்பன கிடைக்கப் பெறாத ஆசிரியர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வருகை தருமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (ஐ-7)

## விற்பனையாளர் தேவை

சங்கானையில் இயங்கும் **Fancy** கடைக்கு ஆண்/பெண் விற்பனையாளர் தேவை.
சொந்தக் கையெழுத்துடனான சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும்.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*

**விளம்பர இல. 1158**
**மே/பா உதயன்.** (81656)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

காரைநகர் யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் 2000 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது மகள் **வே.தேவகுமாரி - 132** புள்ளிகள் பெற்றார். இப்பெறுபேற்றினை மீளாய்வு செய்யுமாறு அதிபர் விண்ணப்பித்த தன் விளைவாக இவர் 147 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.
கற்பித்தலுடன் நிர்வாகத்தையும் திறம்பட நடத்திவரும் அதிபர் திருமதி த. நாகரத்தினம் அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**திரு.திருமதி செ.வேலுப்பிள்ளை** (பெற்றார்)

*நடுத்தெரு,*
*காரைநகர்.* (C/14303)

## முதலாம் வருட நினைவஞ்சலி



**அமரர் பிலிப் வேதநாயகம்**

தோற்றம் 05-06-1913 மறைவு 16-12-1999

"மரித்தோர் உத்தானத்தையும்
வரவிருக்கும்
மறு உலக வாழ்வையும் எதிர்பார்த்திருக்கிறேன்"

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*28/1, சோமசுந்தரம் அவனியு,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (81714)

## நீங்காத நினைவில் ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 09 - 03 - 1948
இறைவன் மடியில் 16 - 12 - 1999

**திருமதி விசாலாட்சி சிதம்பரநாதன்**

திதி: 03-01-2001 (பூர்வநவமி)

சென்றதம்மா ஓராண்டு
சொல்லி அழ யாருமில்லை.
பூத்த மரம் காய்த்து
காய்கள் கனியாகு முன்னே
வெட்டி வீழ்த்தினான் காலன்.
காய்கள் கனியாக வேண்டி
ஆதாரமின்றி அழுது வெடிக்கின்றன.
இரக்கமின்றி அம்மாவைப் பறித்த
காலனே! மீண்டும் அம்மாவை
எம்மிடம் கொண்டு வந்து சேர்!!

**கணவர், பிள்ளைகள்.**

*நீண்டியம்பற்றை,*
*புலோலி வடகிழக்கு,*
*பருத்தித்துறை.* (81704)

## நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம் கட்டடத் திணைக்களத்தில் கடந்த 5வருடங்களாகப் பணிபுரிந்துவந்த தற்காலிக பணியாளர்களில் 14பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
கொழும்பில் இருந்து கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்ட இந்த நிரந்தர நியமனக் கடிதங்கள் உரிய பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
இவர்களுக்கு வழங்கப்பட்ட இந்த நியமனக் கடிதத்தின்படி இப்பணியாளர்கள் 1999 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதியில்இருந்து இப்பணியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். (இ-15)

## சைவப்புலவர் விரிவுரைகள்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் ஆகியோருக்கான விரிவுரைகள் இன்றும் நாளையும் காலை 9 மணிமுதல் முற்பகல் 1 மணி வரை சைவ பரிபாலன சபையின நாவலர் ஆச்சிரமத்தில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.
ஜீ.சீ.ஈ (சாதாரண) பரீட்சை நடைபெறுவதால் வழமையான இடத்தில் இந்த விரிவுரைகளை நடத்தமுடியாததால் புதிய இடத்தில் நடத்தப்படுவதாகவும் கூறப்பட்டது. (இ-3)

## முன்னைய உறுப்பினரே மீண்டும் நியமனம்

சட்டவிரோதக் கைதுகள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பாக ஆராயும் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு மீண்டும் முன்னைய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த நியமனங்கள் தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ளார்.
இந்தக்குழுவினர் வழமைபோல் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் கூடி நிலைமைகளைஆராய்வர். (இ-7)

## இளைஞர் விடுவிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட யாழ். இளைஞர் ஒருவரை விடுதலைசெய்யுமாறு சட்டமா அதிபரினால் யாழ். நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
அரியாலை மலர்மகள் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை ஜெகநாதன் என்ற இளைஞரே விடுதலை செய்யப்படவுள்ளார்.
இவரை ஜனவரி 29 ஆம் திகதி யாழ்.நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறு யாழ். பதில் நீதிவான மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார். (இ-5-6)

## தேவை

### நிர்வாக அலுவலர்

எமது நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு நிர்வாக அலுவலர் தேவை.
இப்பொறுப்பை ஏற்றுக்கொள்பவர், வலுவிழந்தவர்களுடன் சேர்ந்து பழகக்கூடிய சேவை மனப்பான்மை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
நிர்வாக அலுவல்கள், கணக்குவைத்தல், வேறு நிறுவனங்களுடன் தொடர்பு போன்ற கடமைகளைத் தனியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், இதில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
மும்மொழிகளிலும் செயலாற்றக்கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது. உங்கள் விண்ணப்பங்களை ஆங்கிலத்தில் சொந்தக் கையட எழுதி அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **29.12.2000.**
தேர்வு செய்யப்படுபவர் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்படுவார்.

**செயலாளர்**
**ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்,**
*47/2, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.* (C/14292)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 06 - 06 - 1993
உதிர்வு 06 - 11 - 2000

**செல்வன் ஜெயபாலசிங்கம் ஜெயபிரசாந்**

பிரகாசமாக வந்து உதித்த எம் இனிய பிரசாந்தே...
சந்ததிக்கு என வந்து உதித்த தனி விளக்கே - நீ
சடுதியில் மறைந்து விட்டாய்...
நீ மறைந்த தவிப்பினிலே நெஞ்சம் வாடுது!
நீ மறைந்த செய்தி இன்றும் கனவாய் உள்ளது.
கனவிலும் தாங்க முடியாத உன் இழப்பை
நிஜமாக எப்படித் தாங்குவோம்...?

உன் பிரிவால் துயருறும்
மாமா குடும்பத்தினர்,
திருமதி தவநாயகம்,
திரு புவனேந்திரன்.

*புகையிரத வீதி, கொக்குவில்.*
*313, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.* (81701)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



புவி நிலத்துள் எமக்கானது 16 - 08 - 1936
சிவகணத்துள் ஒன்றானது 16 - 11 - 2000

**அமரர் விசுவலிங்கம் பஞ்சாட்சரம் (ஆமி)**

முப்பத்தொரு நாள்கள் கடந்து விட்டது அப்பா!
இரவும் பகலும் கண்விழித்து எம்மைக் காத்தாயே அப்பா!
சரிவுகள் வந்தாலும் கலங்காது நின்றாயே அப்பா!
பருத்தியான் காலடி வணங்கிநின்றாயே அப்பா!
அந்தக் காலம் எப்போது வருமோ அப்பா!

அன்னாரின் மறைவை ஒட்டி நேரிலும் பத்திரிகை மூலமும் தொலைபேசி மூலமும் துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

நிரந்தர முகவரி:
*விஜயகிரி,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.
(81771)

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில்

# பேச்சுக்கான சுப நேரத்தை சோதிடர்கள் கணிக்கின்றனர்

கொழும்பு,டிசெ.16

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சுப நேரத்தை முடிவு செய்யும் பொறுப்பு சோதிடர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுக்கான கால அட்டவணையை சோதிடர்களின் ஆலோசனையின்படி தயாரிக்குமாறு ஜனாதிபதி தெரிவித்த யோசனையின் பேரிலேயே இப்பணி சோதிடர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜனாதிபதிக்கு நெருக்கமான அமைச்சர் ஒருவரின் கண்காணிப்பில் பிரபல சோதிடர்கள் பேச்சுக்கான சுப நேரத்தைக் கணிப்பதில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-20)

# கமநல சேவை நிலையம் புங்குடுதீவில் இயங்குகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.16

புங்குடுதீவு கமநல சேவை நிலையம் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

1991ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயங்காத நிலையில் இருந்த இந்த நிலையம் கமநல சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மீள ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த கமநல சேவைகள் நிலையத்தின் தலைவராக க.திருநாவுக்கரசு தெரிவு செய்யப்பட்டுள்ளார். நிலையத்தின் செயற்பாடுகளுக்கு 2 லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

கமநல சேவைகள் நிலையம் இயங்கத் தொடங்கியதை அடுத்து புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு பகுதிகளிலுள்ள விவசாய சம்மேளனங்களும் சிறப்பாகச் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ-5-6)

# உடுவில் கமநல சேவைப் பிரிவில் உரக் களஞ்சியம் அமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

வடக்கு மீள்குடியமர்வு அதிகார சபையின் நிதி உதவியில் இருந்து உடுவில் கமநல சேவைகள் நிலையப் பகுதியில் உரக் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

500 மெற்றிக்தொன் உர வகைகளைக் களஞ்சியப்படுத்தக் கூடிய இந்தக் கட்டடத்தின் வேலைகள் அண்மையில் பூர்த்தி செய்யப்பட்டன.

புத்தூரில் ஏற்கனவே ஆயிரம் மெ.தொன் உரவகைகளைக் களஞ்சியப்படுத்தும் வசதியைக் கொண்ட களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களிலும் 200 மெற்றிக்தொன் உரவகைகளைக் களஞ்சியப்படுத்தும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் தெரிவித்தார். (ஐ-5-6)

# வடக்கு-கிழக்கு கல்விப் பிரச்சினை தொடர்பான உயர்மட்ட மாநாடு

## செவ்வாய்க்கிழமை இசுருபாயவில்

திருகோணமலை,டிசெ.16

வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பிரச்சினைகள் தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இசுருபாயவில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன் உட்பட உயர்மட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொள்வர்.

அதிபர் ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு, சம்பள நிலுவைகள் மற்றும் பதவியுயர்வுகள், இலவச பாட நூல் விநியோகம் என்பன பற்றி இந்த மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இதேவேளை-

மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சருக்கும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் குழுவுக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுக்கள் குறித்தும் -

அது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் -

இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்தார். (இ-7)



கோப்பாய் தெற்கு முழுமதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. கட்டடத்தை சு.இராசரத்தினம் வைபவரீதியாக நாடா வெட்டித் திறந்து வைப்பதை படத்தில் காணலாம். அருகில் நிலையத்தின் தலைவர் நா.இராசரத்தினம், செயலாளர் சி.விஜயகுருராஜா ஆகியோரும் உள்ளனர்.

*(படம்: வலி.கிழக்கு செய்தியாளர்)*

# வடபிராந்திய நீர்வளச் சபைக்கு 40 லட்சம் ரூபா பொருள் இழப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

கடந்த கால வன்செயல்களினால் வடபிராந்திய நீர்வளச் சபைக்குரிய 40 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் மற்றும் பொருள்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கைகள் கொழும்பில் உள்ள நீர்வளச் சபையின் தலைமைச் செயலகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வன்செயல்களினால் சபையின் ஆய்வுகூடம் மற்றும் பெறுமதிமிக்க உபகரணங்கள், ஆவணங்கள் யாவற்றையும் இழந்துள்ள நீர்வளச் சபையை மீண்டும் இயங்கச் செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் இதுவரையும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று சபை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.(ஐ-5)

# யாழ்.மாநகர சபை ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாநகர சபை ஊழியர்கள் அனைவருக்கும் சீருடைகள் வழங்கப்படவேண்டும் என்று மாநகர சபையின் சிற்றூழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.மாநகர சபை சிற்றூழியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் இக்கோரிக்கை தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ச.சுரேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட சபையின் பதில் ஆணையாளர் இராசா தணிகாசலத்திடம் ஒன்பது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளின் விவரம் வருமாறு:-

★ தற்காலிகமாக பதவியிலுள்ள சகல பகுதி ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும்.

★ வேலைப் பகுதியில் கடமையாற்றும் சிமெந்து, தச்சுத் தொழிலாளர்கள், பெயின்ட் பூசுபவர், மெற்றல் வேலை ஆகிய துறைகளில் பணிபுரியும் நிரந்தர ஊழியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

★ வேலைப் பகுதியில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு தலைமைத்துவ தொழிலாளி நியமனம் வழங்கப்படுதல் வேண்டும்.

★ சுகாதாரப் பகுதியில் கிருமிநாசினி தெளிக்கும் ஊழியர்களுக்கும் வேலைத் தலத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் மாதத்தில் இரண்டு தடவைகள் குறுகிய லீவு வழங்கப்பட வேண்டும்.

★ களஞ்சியப் பகுதிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு களஞ்சிய தொழிலாளர் பதவியும் அலுவலகங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அலுவலகத் தொழிலாளி நியமனமும் வழங்கப்படவேண்டும்.

இவற்றை விட மேலும் சில கோரிக்கைகளும் ஊழியர்களால் முன்வைக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் யாழ்.மாநகர சபையின் உறுப்பினர்களான செ.கந்தையன், மு.தவநாதன், ச.ஜெயச்சந்திரன், ம.மங்களநேசன் மற்றும் பதில் கணக்காளர் இ.க.இராஜேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் கி.கலாராஜ், வடக்கு - கிழக்கு மாகாண பொது சிற்றூழியர் சங்கத் தலைவர் சி.பஞ்சாட்சரம் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். கூட்டத்தில் வருடாந்த கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-5)

## இலவச பாடநூல் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச பாடநூல்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை உரிய வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வலயக் கல்வி அலுவலகங்களில் இருந்து அந்தந்த வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்குப் பின்னர் பாடநூல்கள் விநியோகிக்கப்படும். (ஐ-10)

## தரம் 9 மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் தரம் 9 மாணவர்கள் தங்கள் கணிப்பீட்டு விண்ணப்பப் படிவத்தில் கையெழுத்து இடுவதற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மகா வித்தியாலயத்துக்கு வருகை தருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-117)

## மாதாந்த உதவிப்பணம்

நவாலி,டிசெ.16

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றுக்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் டிசெம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பகுதி தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-100)

## லாம்புகள் வழங்கப்பட்டன

நவாலி,டிசெ.16

ஆனைக்கோட்டை முள்ளி முகாமில் தங்கியிருக்கும் 124 குடும்பங்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 'ஹரிக்கேன்' லாம்புகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் கடந்த வாரம் வழங்கப்பட்டன. (ஐ-100)

உ

ஓம் கணபதி துணை

அரி ஓம் நமோ நாராயணாய நம



யாழ்.பல்கலைக்கழக ஆன்மீக நாட்டமுள்ள மாணவர்களினால் நடத்தப்பெறும்

அன்னை சாரதாதேவியாரின் ஜெயந்தி விழா

இடம்:- யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு

காலம்:- நாளை (17-12-2000) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8.30 மணி

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 8.30 - 8.35 | மங்களவிளக்கேற்றல் |
| 8.35 - 8.45 | அன்னைக்குப் பூஜை |
| 8.45 - 9.00 | பஜனை |
| 9.00 - 9.15 | பிரசாதம் வழங்கல் |
| 9.15 - 9.30 | அன்னையின் வரலாறு |
| 9.30 - 9.45 | சொற்பொழிவு (1893 ஆம் ஆண்டு சர்வமத சபையில் சுவாமிஜி அவர்கள் ஆற்றிய முதலாவது உரை மீண்டும் பாவனை செய்யப்படும்) |
| 9.45 - 9.55 | ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வரலாறு |
| 9.55 - 10.05 | சொற்பொழிவு (இராமகிருஷ்ண பரமஹம்சரின் கல்விச் சிந்தனைகள்) |
| 10.05 - 10.10 | நாகஸ்வரத நாராயணரின் மகிமை |
| 10.10 - 10.20 | சொற்பொழிவு (இந்துசமய வளர்ச்சிக்கு அன்னையின் பங்களிப்பு) |
| 10.20 - 11.05 | பட்டிமன்றம் (தலைப்பு அரங்கில் அறிவிக்கப்படும்) |
| 11.05 - 11.15 | சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு |
| 11.15 - 11.45 | தனிநடனம் (குறும்பால் எனை மயக்கும் கோபாலா) (திருமதி மோகனா பாலசுப்பிரமணியம்) |
| 11.45 - 12.30 | தெய்வீக கானங்கள் (யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள்) |
| 12.30 - 12.40 | தேவாரம் - *நிகழ்ச்சி நிறைவு.* |

பிற்குறிப்புகள்:-

✳ தூய அன்னையானவர் அன்பே உருவானவர். எனவே அவரது விழாவிற்கு வருகை தருபவர்களும், பங்குபற்றுபவர்களும் அவரது குழந்தைகளே. எல்லோரும் அவருக்குச் சமம். எனவே இவ்விழாவில் வழமையான விழாக்களில் இடம்பெறும் சம்பிரதாய நிகழ்வுகளான தலைவர், வரவேற்புரை, தலைமையுரை, ஆசியுரை, நன்றியுரை, பிரதம விருந்தினர் என்பன எதுவும் இடம்பெறமாட்டாது.

✳ நிகழ்ச்சிகள் யாவும் பழைய நேரப்படி இடம்பெறும்.

✳ தேவை ஏற்படின் நிகழ்ச்சிநிரலில் மாற்றம் செய்யப்படும்.

அனைத்து மத அன்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆன்மீக நாட்டமுள்ள மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(81723)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

வேலாயுதம் கிருஷாந்தி என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0903002397)இருபாலை V.H. லேனுக்கும் கோப்பாய் மகாவித்தியாலயத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வேலாயுதம், V.H.லேன், இருபாலை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.சன்மானம் வழங்கப்படும்.(81717)

தம்பையா உதயராணி என்பவருடைய நாவற்குழி, கைதடி எனும் முகவரியுடைய வி.அ.அட்டையும் தே.அ.அட்டையும் (இல.695632039V) யாழ். பஸ்நிலையத்திற்கும் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் 13.12.2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் **342, K.K.S.** வீதி, யாழ்ப்பாணம். மேனகா அச்சகத்தில் ஒப்படைத்து உதவவும். (81706)

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1966 இல் பிறந்த விசாக நட்சத்திரத்தையுடைய லண்டன் **B.Sc.** மணமகனுக்கும்,1969இல் பிறந்த உத்தரம் நட்சத்திரத்தையுடைய சுவிஸில் வசிக்கும் மணமகனுக்கும் (அந்த நாடுகளிலும்), 1969 இல் பிறந்த அனுஷ நட்சத்திரத்தையுடைய உள்ளூரில் சுயதொழில் செய்யும் மணமகனுக்கும் மணமகள்கள் தேவை.தொடர்பு:விள. இல.1161, மே/பா உதயன். (81722)

## இறைச்சிக் கோழி

சேவல்,கல்போட மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.சுத்தம் செய்தல் இலவசம். 31,மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (81132)

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் தபாற்கந்தோருக்கு அண்மையாக **7 1/2** நில. பரப்புக் காணி (கல்வீடும் கிணறும் கொண்டது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: E.நடேசன், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், அளவெட்டி தெற்கு, அளவெட்டி.(81709)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய (நட்சத்திரம் பூரம் 3ஆம் பாதம்) இங்கிலாந்தில் பொறியியலாளர் தகைமையுடன் தனியார் நிறுவனமொன்றில் உதவி முகாமையாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு, படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விள.இல.1156 மே/பா. உதயன். (81535)

## ஆங்கில வகுப்புக்கள்

தனிப்பட்டவர்களுக்கு அல்லது சிறு குழுக்களுக்கு ஆங்கிலம - தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை, ஆங்கில இலக்கியம் தரம் 9 தொடக்கம் தரம் 11 வரை, E.S.L - Paper Classes for G.A.Q and B.A.தொடர்பு:112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (81597)

## விற்பனைக்கு

அல்ஷேசன் **COLOMBO PUP** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 169, மருத்துவபீட வீதி, திருநெல்வேலி. (81718)

புதிய, பழைய வீடியோ கசற்றுக்கள் 800, நசனல்**T.V. (18")** யமகா ஜெனறேற்றர் **(850 H.P)** என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: பீற்றர், 43,கோயில் வீதி, யாழ்ப்பாணம். (81664)

## புறோயிலர் கோழி விற்பனைக்கு

கொழும்பில் இருந்து சுத்தம் செய்யப்பட்ட பிறிமா புறோயிலர் கோழி இறைச்சி தினமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.கரன் ஆஸ்பத்திரிவீதி,(கஸ்தூரியார் வீதிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம், சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (81720)

## காணி விற்பனைக்கு உண்டு

அளவெட்டி வடக்கில் மூக்கன் புலம் என்னும் பெயர் கொண்ட 10 பரப்பு நல்ல தோட்டக் காணி (வெற்றுக் காணி) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கா.நல்லதம்பி. அணிஞ்சிலடி, கணேஸ்வரம், அளவெட்டி. (81408)

## தேவை

நியூ மாக்கற்,
**வினோதா சலூனுக்கு**
ஆள்கள் தேவை.
உடன்
தொடர்பு கொள்ளவும்.
*சி. சிவலிங்கம்,*
**வினோதா சலூன்**
*நியூ மாக்கற்,*
*யாழ்ப்பாணம்.*
(81715)

வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றிய


## பொதுக்கூட்டம்

இடம்: வர்த்தக விரிவுரை மண்டபம் - II (CH II)
காலம்: நாளை **(17-12-2k)** ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 4.30 மணி

அனைத்து வவுனியா மாவட்ட மாணவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்,
*வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியம்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
(81728)

## அன்புத் தந்தையின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தமியாம்பிள்ளை சாமிநாதன்**
(பப்பா)
(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 1932-08-05 | 1998-12-26 |

தாயுடன் குஞ்சுகளை விட்டுவிட்டு
தனியாகச் சென்றீரோ?
சிறகடிக்கத் தெரிந்தும் திசை தெரியாமல் நிற்கின்றோம்
கூட்டுக்குள்ளே வளர்ந்த எங்களுக்கு
உலகைக் காட்டி பாதிவழியில் விட்டுச் சென்றீரோ?
எதிர்பார்த்தோமா உங்களைப் பிரிவோம் என்று
காலையில் வழி அனுப்பி என்னை மதியம் ஏங்க
வைத்தீரோ?
ஆண்டுகள் இரண்டாகியும் ஆறாதிருக்கின்றோம்.
தேடித் திரிகின்றோம்- பப்பா கிடைப்பீரோ நீர் எமக்கு?

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**உற்றார், உறவினர்.**

*சுதன் றேடர்ஸ்,*
*(சுதன்)*
*பங்சால் வீதி,*
*சின்னக்கடை.*
(81727)

HARVEST
ஹாவஸ்ட்
புதுச்சுவை குன்றாத தேநீர்
மலையகத்தின் பசுமையான தோட்டங்களிலிருந்து வரும் ஹாவஸ்ட் தேயிலை.....
நறுமணமும் புத்துணர்வும் தந்திடும் தேநீரை நீங்கள் பருக நுட்பமாகக் கலவை செய்யப்பட்டுள்ளது.


100 கிறாம் பக்கெட்டுகளில் கிடைக்கும்
Marketed by
BURNS
PHILP LANKA (PVT) LTD.
124, Templers Road, Mt.Lavinia.
JEYAPASA & COMPANY
104.A, Stanley Road, Jaffna.
(C/14312)

Simas
MARGARINE
சீமாஸ்
மாஜரின்


வாங்கிப் பாருங்கள்
மிகவும் வசதியானது
விலை சகாயமானது
பாவித்தல் சுலபமானது

- கேக் தயாரிக்க
- பான் தயாரிக்க
- பனிஸ் தயாரிக்க
- பிஸ்கட் (குக்கீஸ்) தயாரிக்க
- சமையலுக்கு
- தாளிப்பதற்கு
- பாணில் தடவி உண்பதற்கு

கொலஸ்டரோல் அற்றது
ஹலால் செய்யப்பட்டது

☆ பக்கெட்டை திறந்த சில நாள்களின் பின் குளிருட்டியில் வைப்பது நல்லது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரொக்கிஸ்ட்
ரூபா பன்முக வர்த்தகம்
104,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பேர்ண்ஸ் பிலிப் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
124, டெம்பிளர்ஸ் வீதி, கல்கிசை.
தொலைபேசி:731658-1 பக்ஸ்:731662, 717969

சீமாஸ் மாஜரின்
*வசதியானது... சுவையானது... சத்துள்ளது*
(C/14313)

# விவசாய சம்மேளன வங்கியை உடுவிலில் அமைக்கக் கோரிக்கை

வலிகாமம் தெற்கு, டிசெ. 16

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் விவசாயிகளின் நன்மை கருதி விவசாய சம்மேளன கிராமிய வங்கி ஒன்று நிறுவப்பட வேண்டும் எனக் கோரும் தீர்மானம் உடுவில் கமநல கேந்திர நிலைய சம்மேளனத்தின் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உடுவில் கமநல கேந்திர நிலைய மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் சி. திருக்குமார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இப்பிரதேச விவசாயிகளின் நன்மை கருதி, விதை தானியங்கள் விரைவில் பழுதடைந்து போகாமல் இருப்பதற்காக, கமநல கேந்திர நிலையத்துக்கு ஒரு குளிர் சாதனப்பெட்டி பெறப்பட வேண்டும் என்றும் —

நீண்டகாலமாக வெற்றிடமாக உள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான விவசாய போதனாசிரியர் பதவி நிரப்பப்பட வேண்டும் என்றும் —

மருதனார்மடம் பொதுச் சந்தையை நவீனமயப்படுத்தி அங்கு பொதுத்தராசு பாவிக்கப்பட வேண்டும் என்றும் —

கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கமநல கேந்திர நிலையத்தைச் சேர்ந்த 26 விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(ஐ-152)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

இம் மாதம் 14 ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டோர்.

விவரம்:–

**சங்கானை**

(169970ஏ), (169970பி)
(169981ஏ), (169981பி),
(169981சி), (170327ஏ),
(170328ஏ), (170328பி),
(170328சி), (172723ஏ),
(172723பி), (172882ஏ),
(175135ஏ), (175174ஏ).

**சாவகச்சேரி**

(154640ஏ), (154640பி),
(155708ஏ), (155708பி),
(155949ஏ), (162435ஏ),
(162435பி), (167975ஏ),
(169780ஏ), (169787ஏ),
(169787பி), (169872ஏ),
(169872பி).

**கரவெட்டி**

(129624ஏ), (129624பி),
(129624சி), (146859ஏ),
(151621ஏ), (151621பி),
(151621சி), (151621டி),
(153725ஏ), (153725பி),
(153881ஏ), (154817ஏ),
(154817பி), (155688ஏ),
(155688பி), (155871ஏ),
(155871பி), (158124ஏ),
(158266ஏ), (160120ஏ),
(160120பி), (160120சி),
(160120டி), (160120ஈ)
(160232ஏ), (160232பி),
(160232சி), (160232டி),
(160232ஈ), (160232எவ்),
(160251ஏ), (160251பி),
(160251சி), (162017சி),
(162284சி), (162284டி),
(162284ஈ), (162464ஏ),
(162484ஏ), (162484பி),
(164515ஏ), (164879ஏ),
(164879பி), (164879சி),
(164880ஏ), (165069ஏ),
(165069பி), (165120ஏ),
(165323ஏ), (165323பி),
(165323சி), (165394ஏ),
(167178ஏ), (167237ஏ),
(167237பி), (167438ஏ),
(167438பி), (167438சி),
(167438டி), (167961ஏ),
(167997ஏ), (168064ஏ),
(168165ஏ), (169605ஏ),
(169612ஏ).
(149651ஏ), (149651பி),
(162614ஏ), (162678ஏ),
(162678பி), (162678சி),
(166966ஏ), (166966பி),
(166966சி), (166966டி),
(166988ஏ), (166988பி),
(166999ஏ), (166999பி),
(166999சி), (166999டி),
(166999ஈ), (166999எவ்),
(167046ஏ), (167046பி),
(167068ஏ), (167115ஏ),
(167121ஏ), (167121பி),
(167133ஏ), (167133பி),
(168306ஏ), (168306பி),
(168306சி), (168306டி),
(168313ஏ), (168336ஏ),
(168336பி), (168355ஏ),
(168399ஏ), (168399பி),
(170459ஏ), (170459பி),
(169613ஏ), (169613பி),
(169614ஏ), (169615ஏ),
(169663ஏ), (169802ஏ),
(169802பி), (169897ஏ),
(169897பி), (172207ஏ),
(172207பி), (172209ஏ),
(172259ஏ), (172259பி),
(172259சி), (172285ஏ),
(172285பி), (172432ஏ),
(172432பி), (172432சி),
(172432டி), (172432ஈ),
(172434ஏ).

**கோப்பாய்**

(170464ஏ), (170464பி),
(170471ஏ), (170471பி),
(170472ஏ), (170472பி),
(170472சி), (170472டி),
(170476ஏ), (170476பி),
(170492ஏ), (170492பி),
(170494ஏ), (170494பி),
(170506ஏ), (170512ஏ),
(170512பி), (170514ஏ),
(170514பி), (170518ஏ),
(170525ஏ), (170543ஏ),
(170609ஏ), (170614ஏ),
(170614பி), (170614சி),
(170622ஏ), (170622பி),
(170623ஏ), (170623பி),
(170625ஏ), (170633ஏ),
(173320ஏ), (173993ஏ),
(173993பி).

**நல்லூர்**

(161851ஏ), (161851பி),
(169290ஏ), (169290பி),
(170034ஏ), (170069ஏ),
(170399ஏ), (172971ஏ),
(172971பி), (172971சி),
(173001ஏ), (173001பி),
(173161ஏ), (173194ஏ),
(173194பி), (173194சி),
(174793ஏ), (174793பி),
(174832ஏ), (174832பி),
(174832சி), (175115ஏ),
(175115பி), (175115சி).

**பருத்தித்துறை**

(151091ஏ), (151152ஏ),
(154616ஏ), (160301ஏ),
(162262ஏ), (162262பி),
(162434ஏ), (165108ஏ),
(165108பி), (165233ஏ),
(165233பி) (105233சி),
(167265ஏ), (167434ஏ),
(167434பி), (167463ஏ),
(168062ஏ), (169531ஏ),
(169574ஏ), (169574பி),
(169610ஏ), (169668ஏ),
(169791ஏ), (169818ஏ),
(169818பி), (169818சி),
(169890ஏ), (169890பி),
(169890சி), (172192ஏ),
(172280ஏ), (172280பி),
(172353ஏ), (172353பி).

**சண்டிலிப்பாய்**

(164040ஏ), (165927ஏ),
(165927பி), (166593ஏ),
(166626ஏ), (166626பி),
(166626சி), (166857ஏ),
(168944ஏ), (168944பி),
(169177ஏ), (169177பி),
(170101ஏ), (170313ஏ),
(170313பி), (170314ஏ),
(170347ஏ), (170347பி),
(170347சி), (172714ஏ),
(172758ஏ).
(172759ஏ), (172808ஏ),
(172897ஏ), (172897பி),
(172900ஏ), (172975ஏ),
(172981ஏ), (173093ஏ),
(173094ஏ), (173159ஏ),
(173159பி), (173159சி),
(174726ஏ), (175202ஏ),
(175202பி).

**தெல்லிப்பழை**

(165630பி), (165630சி),
(166534ஏ), (166534பி),
(166534சி), (166535ஏ),
(169087ஏ), (170159ஏ),
(170159பி), (170195ஏ),
(170195பி), (172809ஏ),
(173000ஏ), (173000பி),
(173000சி), (173062ஏ),
(173062பி), (174725ஏ),
(174728ஏ), (174728பி),
(174790ஏ), (174819ஏ).

**உடுவில்**

(157766ஏ), (160624ஏ),
(170009ஏ), (170009பி),
(170074ஏ), (170074பி),
(172891ஏ), (172891பி),
(172951ஏ), (172951பி),
(172951சி), (172951டி),
(172951ஈ), (172951எவ்),
(172951ஜி), (173052ஏ),
(173052பி), (173052சி),
(173087ஏ), (173087பி),
(174737ஏ), (174737பி),
(174778ஏ), (174787ஏ),
(175132ஏ), (175132பி),
(175132சி), (17514ஏ),
(175153ஏ), (175158ஏ).

(ம-6-10)

# புலமைப் பரிசில் பரீட்சையில் மொத்தம் 840 மாணவர் சித்தி.

வலிகாமம் தெற்கு, டிசெ. 16

இவ் வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 840 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதில் வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து 233 பேர் தெரிவாகி உள்ளனர். சென்ற வருடத்திலும் பார்க்க இவ் வருடம் வலிகாமம் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

வடக்கு—கிழக்குமாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களில் மிகப் பெரிய வலயமாக வலிகாமம் கல்வி வலயம் உள்ளது அதனால் எதிர் வரும் காலங்களில் இப் புலமைப் பரிசில் பரீட்சையில் இவ் வலயத்தில் இருந்து தெரிவு செய்யப்படுவோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என வலிகாமம் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா தெரிவித்தார்.

வலிகாமம் கல்வி வலய சங்கானை கல்விக் கோட்டத்தில் 17 பாடசாலைகளில் இருந்து கடந்த வருடம் 48 பேரும் இவ் வருடம் 50 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

அதேபோல் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் 21 பாடசாலைகளில் இருந்து கடந்த வருடம் 69 பேரும் இவ் வருடம் 58 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தில் 9 பாடசாலைகளில் இருந்து கடந்த வருடம் 25 பேரும் இவ் வருடம் 34 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

உடுவில் கல்விக் கோட்டத்திலேயே கூடுதலான மாணவர்கள் கடந்த வருடமும் இவ் வருடமும் சித்தியடைந்துள்ளனர். உடுவில் கல்விக் கோட்டத்தில் 18 பாடசாலைகளில் கடந்த வருடம் 77 பேரும் இவ் வருடம் 91 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

வலிகாமம் வலயத்தில் உள்ள 129 பாடசாலைகளில் கடந்த வருடம் 58 பாடசாலைகளில் இருந்து 219 பேரும் இவ் வருடம் 65 பாடசாலைகளில் இருந்து 233 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-152)

# உவர்நீர்த் தடுப்புத் திட்டத்துக்கு ரூ. ஒருகோடி 70 லட்சம் ஒதுக்கீடு

வடமராட்சி கடலேரியில் தொண்டமனாறு உவர்நீர்த் தடுப்புத்திட்ட வேலைகளை மேற்கொள்வதாக வடக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அதிகார சபை (றான்) ஒரு கோடி 70 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

இங்குள்ள சேதமடைந்த அணையைப் புனரமைப்புச் செய்வதற்கும் உவர்நீர் உட்புகாது தடுப்பதற்கும் இந்த நிதிபயன்படுத்தப்படவுள்ளது.

கடல் நீர் உட்புகாது தடுப்பதற்கும், மிதமிஞ்சிய தண்ணீரை வெளியேற்றுவதற்கும் இந்த அணைக்கட்டில் 18 இரும்புக் கதவுகள் பொருத்தப்படவுள்ளன.

இவ்வாரம் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட வடக்கு — கிழக்கு மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி எஸ். செல்வரத்தினம் தொண்டமனாறுசென்றுதடுப்புத் திட்ட நடவடிக்கையை தமது அதிகாரிகள் சகிதம் பார்வையிட்டார். (ஐ-135)

# தையல் பயிற்சி நெறி

வலிகாமம் தெற்கு, டிசெ. 16

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவினரால் நடத்தப்பட்டு வரும் தையல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் 16 — 45 வயதுக்குட்பட்ட, கல்விப் பொதுத் தராதர வகுப்பு வரை கல்விகற்ற பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலர், வலி. தெற்கு, உடுவில் என்ற விலாசத்துக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஆர். ஜெயப்பிரகாசம் அறிவித்துள்ளார். (ஐ-152)

# வலு இழந்தோரை ஆதரித்து நல்வாழ்வளிக்க முன்வர வேண்டும்

## ஊனமுற்றோர் தின விழாவில் உரை

வலி. கிழக்கு, டிசெ. 16

நாம் அனைவரும் ஒன்றிணைந்து வலு இழந்தவர்களை மதித்து அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதன் மூலம் அவர்களின் நல்வாழ்வுக்கு உதவ முடியும்

கடந்த 3 ஆம் திகதி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் இடம்பெற்ற சர்வதேச ஊனமுற்றோர் தினத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக நிதியாளர் க. கனகரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி என். சிவராசா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஊனமுற்றவர்கள் என்று நாம் அவர்களை சொல்லவே முடியாது. இன்று அவர்களால் மேடையில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நாம் — உடலால் ஊனமுற்றிருக்கலாம் ஆனால் உள்ளத்தால் என்றும் ஊனமுற்றவர்கள் அல்லர் என்பதனையே ஆணித்தரமாக விளக்கியுள்ளன.

ஊனமில்லாதவர்களிலும் பார்க்க அவர்களுடைய வாழ்க்கை மகிழ்ச்சியாகவே உள்ளது அவர்களை மதித்து அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கொள்வனவு செய்து அவர்களது தொழில் முயற்சியை உயர்த்த வேண்டும். அது மட்டுமல்லாமல் இன்று பொது இடங்களில் அவர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்த முன்னுரிமை வழங்கி அவர்களின் கலையுணர்வுகளையும் வளர்க்க வேண்டும்

ஊனமுற்றிருந்தாலும் கூட கல்விமான்கள், கலைஞர்கள், தொழில்சார்ந்த நிபுணர்கள் எனப்பலரும் தமது திறமைகளை வெளிக்காட்டுகின்றார்கள்.

ஆகவே இவர்களை இப்படி வலுவூட்டுவதன் மூலம் சமூகத்தில அவர்களுக்கு நல்ல வாழ்வை அளிகக முடியும்.

இந்தப்பணி எமது சமூகம் தலைநிமிரும் வரையும் தொடரும் பணி. நாளாந்தம் யுத்தத்தினாலும் பலர் அங்கவீனம்அடைகின்றனர். எனவே எல்லோரும் இந்தச் சங்கத்திற்குப் பக்கபலமாக நின்று அதனை வளர்க்க முன்வர வேண்டும் — என்றார்.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் கலாநிதி டாக்டர் என். சிவராசா தனது தலைமையுரையில் கூறியதாவது:-

உலக ஊனமுற்றோர் தினம் 10 வருடங்களாக எமது சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. உலக சுகாதார திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி 10 சதவீதமானவர்கள் ஊனமுற்றுள்ளனர் இதில் பிறவியிலேயே ஊனமுற்றோர், நோய்காரணமாக ஊனமுற்றோர், யுத்தம், விபத்து, காரணமாக ஊனமுற்றோர் எனப் பலர் வீடுகளில் முடங்கியுள்ளனர்

பலர் மேடைகளிலேயே வந்து தமது திறமைகளை வெளிக்காட்டுகின்றனர்.

ஆகவே இவர்களுடைய திறமை, உழைப்பு என்பவற்றுக்கு மதிப்புக் கொடுங்கள். இவர்களுக்காக உழைக்க முன்வருவோர் தொகை அதிகரிக்க வேண்டும் — என்றார்.

ஊனமுற்றோர் தின விழாவில் ஆரம்ப நிகழ்வாக ஊனமுற்றவர்களுக்கான முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, பெண்களுக்கான பந்தாட்டப் போட்டி, கவிதை, கட்டுரை வாசித்தல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெற்றன.

(ம-180)

# இஸ்ரேல் - பலஸ்தீனப் பேச்சு

# நான்கு மாதத்தின்.பின் ஆரம்பம்

ஜெருசலேம், டிசெ. 16

நான்கு மாத இடைவெளிக்குப் பின்னர் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தும் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சரும் காஸாவில் உள்ள ஓர் இடத்தில் நேற்று முன்தினம் இரவு சந்தித்துப் பேசினர். கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவில் இடம்பெற்ற பேச்சுக்கள் எந்தவித முன்னேற்றமும் இன்றி முறிவடைந்ததை அடுத்து தற்போதே இரு நாடுகளுக்கும் இடையில் சமாதானப்பேச்சு மீண்டும் ஆரம்பமாகி உள்ளது.

மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் தொடரும் வன்முறைகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது குறித்தும்—

இஸ்ரேலியப் பகுதிகளில் பணியாற்றும் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் தமது பணிகளுக்குத்திரும்புவது குறித்தும்—

மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்தும்—

நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## காஸா,மேற்குக்கரைப் பகுதிகளில் வன்முறைகள் தொடர்கின்றன

ஜெருசலேம். டிசெ. 16

காஸா மற்றும் மேற்குக் கரைப் பிரதேசங்களில் கடைசியாக நடைபெற்ற மோதல்களில் 5 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் படையினருடனான இந்த மோதல்களில், அவர்கள் சுட்டதில் 4 பலஸ்தீனப் பொலீஸாரும் ஒரு ஹமர்ஸ் இயக்க உறுப்பினரும் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நடைபெற உள்ள பொதுத் தேர்தல்களுக்கு முன்னர் பலஸ்தீனர்களுடன் சமாதான உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக் மேற்கொண்டு வரும் முயற்சிகளை அண்மைய இந்த மோதல்கள் மிக மோசமாகப் பாதிக்கும் என்றுதெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம்—

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் லிபியத் தலைவர் கேணல் கடாபியை நேற்று முன்தினம் சந்தித்து மத்திய கிழக்கில் வன்முறைகளைத் தடுப்பது குறித்து பேச்சு நடத்தி உள்ளார். (ம—7)

## இஸ்ரேல் பிரதமர் பதவிக்கான வேட்பாளர் தெரிவில் சிக்கல்

எதிர்வரும் பெப்ரவரி மாத ஆரம்பத்தில் நடைபெற உள்ள இஸ்ரேல் பிரதமர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும் தற்போதைய பிரதமர் எகுட் பராக்குக்கு எதிராக யாரை தேர்தலில் நிறுத்துவது என்பது தொடர்பாக எதிர்க்கட்சியான லிகுட் கட்சிக்குள் முரண்பாடுகள் தோன்றி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பராக்குக்கு எதிரான போட்டிக்கு லிகுட் கட்சியின் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெத்தன் யாஹூவே பொருத்தமானவர் என்று கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதனை அடுத்து லிகுட் கட்சியின் தற்போதைய தலைவர் ஏரியல் ஷெரோனையா நெத்தன் யாஹூவையா தேர்தலில் நிறுத்துவது என்ற சிக்கல் தோன்றி உள்ளது.

எனினும் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள ஒருவரே இஸ்ரேல் பிரதமர் பதவிக்குப் போட்டியிட முடியும். நெத்தன் யாஹூ தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இல்லை. இதனாலேயே இப்போதைய சிக்கல் தோன்றி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. [ம—7]

## புடின் முடிவுக்கு யெல்ட்சின் கண்டனம்

சோவியத் யூனியனின் தேசிய கீதத்தை மீண்டும் ரஷ்யாவில் நடைமுறைப்படுத்த பிரதமர் விளாடிமிர் புடின் எடுத்துவரும் நடவடிக்கைக்கு முன்னாள் பிரதமர் யெல்ட்சின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஒன்றுபட்டசோவியத் யூனியனின் தேசிய கிதம் அது பல நாடுகளாகப் பிரிந்த பின்னர் ரஷ்யாவில் நடைமுறையில் இல்லாதது குறிப்பிடத்தக்கது. [ஒ]

## பங்களாதேஷ் பிரதமர் எச்சரிக்கை

1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் உருவான சமயத்தில் இடம்பெற்ற போரின் போது பங்களாதேஷில் 'பாகிஸ்தான் நடத்திய மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு மன்னிப்புக் கோரவேண்டும் என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா வலியுறுத்தியுள்ளார்.

இல்லாவிட்டால் இரு நாடுகளிடையேயான உறவு சீர்குலையும் நிலை ஏற்படக் கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## ஜனவரி20 இல் புஷ் பதவிஏற்பார்

வாஷிங்டன், டிசெ. 16

அமெரிக்காவின் புதிய அதிபராக ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் அடுத்த மாதம் 20 ஆம் திகதி பதவியேற்பார்.

உலக வல்லரசான அமெரிக்காவின் 43 ஆவது அதிபராக அவர் பொறுப்பேற்றுக் கொள்வார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை வாஷிங்டன் வரும் புஷ், அதிபர் கிளின்ரனையும் துணை அதிபர் அல்கோரையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபரான ஜோர்ஜ் புஷ்ஷின் மகனான டபிள்யூ.புஷ் இள வயதில் அமெரிக்க விமானப் படையின் சண்டை விமான விமானியாக இருந்தவர். பின்னர் குடியரசுக் கட்சியில் இணைந்து டெக்ஸாஸ்மாநில ஆளுநராகப் பணியாற்றினார். (ம-7)

## நவாஸ் ஷெரீப்பின் மனைவி நாடு திரும்ப அனுமதி

இஸ்லாமாபாத், டிசெ. 16

பாகிஸ்தானை விட்டுவெளியேறி சவூதி அரேபியாவில் தஞ்சமடைந்துள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரீப் பாகிஸ்தான் திரும்புவதற்கு இராணுவ அரசு 10 ஆண்டுகள் தடை விதித்துள்ளது. எனினும் ஷெரீப்பின் மனைவியும் அவரது தந்தையும் நாடு திரும்புவதற்கு இராணுவ அரசு அனுமதி அளித்துள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் உள்துறைஅமைச்சர் மொகைதீன் கைதர்; ஷெரீப்பின் தந்தை ஷியான் ஷெரீப்பும் மனைவி குல்சும் நவாஸும் நாடு திரும்பி வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவர். ஆனால் நவாஷ் ஷெரீப் இன்னும் 10 ஆண்டுகளுக்கு நாட்டுக்குள் நுழைய முடியாது என்று கூறினார்.

குல்சும் நவாஸை பாகிஸ்தான் திரும்ப அனுமதி அளித்துள்ளதால் ஷெரீப் மறைமுகமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்று அவதானிகள் கூறி உள்ளனர்.

ஷெரீப் சிறையில் இருந்த சமயம் குல்சும் நவாஸ் முஸ்லிம் கட்சியில் இணைந்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். இதனைச் சுட்டிக் காட்டும் அவதானிகள் ஷெரீப் சவூதியில் இருந்தவாறே தனது மனைவி மூலம் அரசியல் நடவடிக்கைகளை மறைமுகமாக மேற்கொள்ளக் கூடும் என்று தெரிவித்துள்ளனர். (ம-7)

## குண்டு வெடிப்பில் 6 குழந்தைகள் உயிரிழப்பு

இஸ்லாமாபாத், டிசெ. 16

பாகிஸ்தான் — ஆப்கானிஸ்தான் எல்லைப்பகுதியான பாஜுர் பழங்குடிப் பகுதியில் நேற்று முன்தினம் குண்டு வெடித்ததில் 6 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

பொம்மை ஒன்றுக்குள் இந்தக் குண்டு வைக்கப்பட்டிருந்தது என்றும் —

அந்தப் பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் 6 பேரும் குண்டு வெடித்ததில் அந்த இடத்திலேயே உயிரிழந்தன என்றும் —

பொலீஸார் தெரிவித்தனர். [ம-7]

## சி. பி.ஐ. க்கு நீதிமன்றம் கண்டனம்

இந்தியாவில் ஹரியான மாநிலத்தில் 13 வயதான 'டெனிஸ்' வீராங்கனையான ரிஷிகா என்பவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி அவர் தற்கொலை செய்யக் காரணமாக இருந்த மாநில பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரத்தோருக்கு எதிரான வழக்கை வேண்டுமென்று தாமதப்படுத்தியதற்காக மத்திய புலனாய்வுத்துறைக்கு அம்பலா நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவத்துக்கு தற்போதுதான் வழக்குத் தொடரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# மண்பரிசோதனை நிலையத்தை அமைக்க விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழ். மாவட்டத்தில் மண்பரிசோதனை நிலையத்தை விரைவில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். நகரில் அமைந்துள்ள ஈ.பி.டி.பியின் அலுவலகத்தில் யாழ். மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி இக் கூட்டத்தில் சகல பகுதிகளையும் சேர்ந்த விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. இக் கூட்டத்தில் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகளால் பின்வரும் விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டன.

★ குடாநாட்டு விவசாய உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்துவதற்குரிய வசதியின்மை.

★ தென்பகுதிக்கு வெங்காயம் அனுப்பி வைப்பதில் உள்ள சிரமங்கள்.

★ பொருள்களை அனுப்புவதற்குக்கப்பல் வசதியின்மை.

★ குடாநாட்டு உற்பத்திப் பொருள்களை நியாய விலையில் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்தல்.

★ மாவட்டத்தில் உள்ள குளங்களில் நீரைத் தேக்கி வைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

★ உள்ளூர் விதைகள் உற்பத்திக்கு வசதிகள் செய்து தரல் வேண்டும்.

★ விவசாயிகளுக்கு வங்கிக் கடன் வசதி செய்து தரப்படல் வேண்டும்.

★ விதை உருளைக் கிழங்கை நியாயமான விலையில் தருவித்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்

★ பழவகை உற்பத்திக்கு வசதி செய்து தரப்படல் வேண்டும்.

★ குரக்கன் மா ஆலையொன்றை அமைப்பதற்கு உதவுதல்.

விவசாயிகளின் இக் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி. கே. குகேந்திரன் உறுதி அளித்தார்.

மாவட்ட விவசாயிகள் அனைவரும் ஒன்றுபட்டு ஓர் அமைப்பின் கீழ் தமது பிரச்சினைகளைக் கண்டறிந்து தெரிவிக்கும் பட்சத்தில் அவற்றைத் தீர்த்து வைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இறுதியாக கமநல கேந்திர நிலையங்களின் குழுத் தலைவரும் வலி கிழக்கு விவசாய சம்மேளனங்களின் தலைவருமாகிய ஆ. கந்தசாமி நன்றியுரை வழங்கினார்.

இக் கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன், கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் மற்றும் அதிகாரிகள் உட்பட விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-10)

## கல்லுண்டாய்கடற்கரைப்பகுதிக்கு நீர்ப்பாசனப் பணிப்பாளர் விஜயம்

சண்டிலிப்பாய், டிசெ.16

இவ்வாரம் யாழ். மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்த வடக்கு — கிழக்கு மாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி எஸ். செல்வரத்தினம் கடந்த புதன் கிழமை கல்லுண்டாய்ப் பகுதிக்கு அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டார்.

இப் பகுதியில் முன்னர் உப்பளம் இருந்த இடத்தில் அதிக அளவு ஊரி மண் அள்ளப்பட்டு வருவதால் கடல் உப்பு நீர் அப்பகுதி விவசாய நிலங்களுக்குள் உட்புகுந்து வருவதை அவர் நேரடியாக அவதானித்தார்.

நவாலி விவசாய சம்மேளனத்தின் தலைவரும், மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவருமான மா. செல்வராசாவும் உடன் சென்று அங்குள்ள நிலைமையை விவரமாக பிரதிப் பணிப்பாளருக்கு விளக்கிக் கூறினார்.

இங்கு சட்ட விரோதமாக மண் அகழப்படுவதால் கடல் நீர் உள்ளே புகுந்து வருவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் —

மழை நீரைத்தேக்கி வைப்பதற்கு இப் பகுதியில் ஒரு குளத்தை நிர்மாணிக்க வேண்டும். அதற்கான அரச முடிக்குரிய காணிகள் இப்பகுதியில் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து தமக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளைப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டார். [ஐ-135]

## புகையிலைச் செய்கையில் ஆர்வம்

அரியாலை, டிசெ. 16

நீர்வேலி, கோப்பாய்ப்பகுதி விவசாயிகள் இம்முறை புகையிலைச் செய்கையிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

புகையிலைச் செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு விவசாயிகள் அதற்கான ஆயத்த வேலைகளை தோட்டங்களில் மேற்கொண்டு வருகின்றனர்.

வாழை, மிளகாய், கோவா போன்ற பயிர்ச் செய்கையும் இப்பகுதியில் அதிகளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சென்ற தடவை வாழைப் பழம் விலை வீழ்ச்சியடைந்ததால் வாழை மரச் செய்கையில் இப்பகுதி விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்தனர். (ஐ-17)

## வங்கிக்குப் பணம் அனுப்பப்பட்ட போதும்

# இடம் பெயர்ந்த 400 குடும்பங்கள் இதுவரை கொடுப்பனவு பெறவில்லை

நவாலி,டிசெ.16

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த 400 குடும்பங்கள இதுவரை அவர்களுக்கான இரண்டாயிரம ரூபா கொடுப்பனவை பெற்றுக்கொள்ள வில்லை எனத தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சி, பளை, யாழ்ப்பா ணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவு களிலிருந்து இடம பெயர்ந்து இப் பிரிவில் தங்கியிருக்கும் இவர்களது கொடுப்பனவுகள் சங்கானை மக்கள் வங்கிக கிளைக்கு அனுப்பி வைத்து பல வாரங்களாகியும் இதனைப் பெற் றுக்கொள்ள இவர்கள் முன்வர வில்லை என்று உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மு.பாலசிங்கம் தெரி வித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக சங்கானை மக்கள் வங்கிக் கிளைக்குச சென்று தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-100)

# அனுமதியின்றி மினி சினிமாக்கள் இயங்குவதைத் தடைசெய்க!

## சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சபையின் அங்கீகாரமின்றி மினி சினி மாக்கள் இயங்குவதை அனுமதிக்க வேண்டாம் என்று யாழ்.மாநகரசபை யின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் சபையின் மேற்பார்வையாளர்களுக்கு உத்தர விட்டுள்ளார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மேற்பார்வையாளர்களுடன் இணைந்து அடிப்படை வசதிகள் இன்றி இயங் கும் மினி சினிமாக்களின் செயற்பா டுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை

அங்கீகாரமற்ற முறையில் மேற் கொள்ளப்படும் ஜூஸ் உற்பத்தி மற் றும் விற்பனையை நிறுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொள்ள வேண் டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கோப்பாய் சுகாதார பணிமனையில் புதிய மாநாட்டு மண்டபம் அமைப்பு

வலி.கிழக்கு,டிசெ.16

கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருமாடிகளைக் கொண்ட மாநாட்டு மண்டபம் ஒன்று 15 லட்சம் ரூபா செலவில் சுகாதாரத் திணைக்களத் தினால் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார நடவடிக்கைகள் சம்பந் தமாக நடத்தப்படும் கருத்தரங்குகள், வகுப்புகள் போன்றவற்றை நடத்து வதற்கு சுகாதாரப் பிரிவில் இடவசதி யின்மை காணப்பட்டதால், அதனை நிவர்த்தி செய்யும் முகமாகவே இந்த மாநாட்டு மணடபம் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# பாதீனியம் ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்ய முடிவு!

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.குடாநாட்டில் வேகமாகப் பரவிவரும் பாதீனியம் களையை அழிக்கும் நோக்குடன் பாதீனியம் அழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்ப டவுள்ளது.

இக்காலப் பகுதியில் கமநல சேவைகள் திணைக்களமும், விவசா யத் திணைக்களமும் இணைந்து பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை களில் ஈடுபடவுள்ளன.

பாதீனியம் ஒழிப்புத் தொடர்பாக நேற்று செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத் தில் ஆராயப்பட்டது.

குடாநாட்டில் 20 ஹெக்டேயரில் பாதீனியம் களை பரவி உள்ளதாக விவசாயத் திணைக்கள புள்ளிவிப ரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் களையைக் கட்டுப்படுத் தும் பொருட்டு கிராம மட்டங்களில் இயங்கும் விவசாய சம்மேளனங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் இணைத்து விவசாயி களின் உதவியுடன் இக்களையை வெட்டி அழிக்க வேண்டும் என்றும்-

இதற்காக தேவையான மண் வெட்டிகள் கமநல சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் என்றும்-கூட்டத்தில் தெரிவிக்கப்பட் டது.

இந்தியாவில் கடந்த 18 வருடங் களாகப் பரவிவரும் பாதீனியம் களை இந்திய இராணுவம் யாழ்ப்பா ணத்தில் நிலைகொண்டிருந்த காலத் திலே இங்கு பரவத் தொடங்கியதா கத் தெரிவிக்கப்படுகிறது.

இக்களை அழிக்கப்படாது விட் டால் இதனை உட்கொள்ளும் கால் நடைகளுக்கு நோய் பரவும் அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கப்படுகிறது.

இக்களைகளைக் கையால் பிடுங் கினால் சொறி, சிரங்கு ஏற்படலாம் என்றும் கிருமிநாசினி மூலமோ மண் வெட்டியால் வெட்டி எறிந்தோ இதனை இல்லாதொழிக்க வேண்டும் என்றும் விவசாயத் திணைக்கள அதிகாரி கள் அறிவுறுத்தி உள்ளனர். (ஐ-5)


### தரம் 6க்கான பிரத்தியேக வகுப்பு நல்லூர்

மேற்படி வகுப்பில் பதிவு செய்த அனைவரும் நாளை காலை 10.00 மணிக்கு இருபாலையிலுள்ள தலைமை நிறுவனத்துக்கு வருகை தந்து கட்டணம் செலுத்தி உரிய விவரங்களைப் பெற்றுக் கொள்ள வும்.

இன்று வருகை தராத எவரும் பின்னர் நேரடியாக அவ் வகுப்பில் இணைந்து கொள்ள முடியாது என்பதை அறியத் தருகின்றேன்.

(81745) -அதிபர்.



### யாழ்ப்பாணம் வணிகர் கழகம் சகல வர்த்தகர்களுக்குமான அறிவித்தல்

எதிர்வரும் நத்தார், புதுவருட பண்டிகையை முன்னிட்டு 16.12.2000 தொடக்கம் 31.12.2000 வரையான சகல சனி, ஞாயிறு தினங்களிலும் அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறை தினங்களிலும் கடைகள் திறந்து வியாபாரம் செய்ய சகல வர்த்தகர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதனையும், இந்த நாள்களில் வேலைசெய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டும் என்பதனையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

- யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

*இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.* (C/14319)


## வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப படிப்புகள் அலகும் திரைப்பட வட் டமும் இணைந்து காண்பித்து வரும் மேலைத்தேய சாஸ்திரிய இசை தொடர்பான திரைப்படங்களின் வரி சையில் இரண்டாவதாக றொபேட் வைஸ் இன் **(ROBERTWISE)** "சவுண்ட் ஒவ் மியூசிக் **(THE SOUND OF MUSIC)** எனும் திரைப் படம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறும்.

இசை, திரைப்பட ஆர்வலர்கள் வருகைதந்து பயன்பெறுமாறு புற நிலைப் படிப்புகள் அலகின் இணைப் பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந் திரன் தெரிவித்துள்ளார். (ஐ-173)

## ஒளி விழா

பாதுகாவலன் பத்திரிகையின் செய்தியாளர் சங்கத்தினரின் கிறிஸ் மஸ் ஒளிவிழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இடம் பெறும். 'பாதுகாவலன்' பத்திரிகை ஆசிரியர் அருட்திரு. ரூபன் மரியாம் பிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு திருவழிபாட்டு நிலைய கலை அரங் கில் நடைபெறும். (ஐ-17)

## லீவு விவரங்களை சமர்ப்பிக்கக் கோரிக்கை

காரைநகர்,டிசெ.16

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிலும் முதலாம் வருட மாணவர்கள் தங்களுடைய இடர்காலக் கொடுப்பனவைப் பெற் றுக் கொள்வதற்கு வசதியாக 01-07-1999 முதல் 31-12-1999 வரையிலான காலப்பகுதிக்குரிய லீவு விவரங்களை தாங்கள் கற்பித்த பாடசாலை அதிபர்களிடம் பெற்று கலாசாலையில் உடன் சமர்ப்பிக்கு மாறு கலாசாலை அதிபர் அறிவித் துள்ளார். (ஐ-73)

## பொதுச்சபைக் கூட்டம்

அரியாலை,டிசெ.16

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை சங்கத் தலை வர் சீ.வி.கே.சிவஞானம் தலைமை யில் சங்கத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெறும். (ஐ-17)

## சாவகச்சேரி செல்ல அனுமதி நிறுத்தம்

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற் றும் வீடுகள் ஆகியவற்றில் உள்ள பொருள்களை மீட்பதற்கு வர்த்த கர்கள், பொதுமக்கள் செல்வது நேற்று முதல் 19 ஆம் திகதி வரை நிறுத் தபட்டுள்ளதாக வரணி சிவில் நிர் வாக அலுவலகத்தில் அறிவிக்கப் பட்டுள்ளது.

சாவகச்சேரி செல்வதற்காக நேற்று வரணிக்குச் சென்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். (இ-117)

## மீண்டும் திருட்டு

கோண்டாவில் பொற்பதி வீதி யில் இயங்கும் பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக கடை இரண்டாவது தடவை திருடர் களின் கைவரிசைக்கு உள்ளாகி யது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்தக் கடையில் இரண்டாவது தட வையாக திருட்டு இடம் பெற்றதாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-117)


### புலமைப்பரிசில் - 2001

பரீட்சை 14இல் அதி கூடிய புள்ளி பெற்ற பரிசுக்குரியவர்கள்

- ஆ. ஜதிகானந் - 188
- ம. அழகரசன - 183
- அ. சாயினி - 182

அடுத்த பரீட்சை : நாளை ஞாயிறு காலை 8.30 (ப.நே.)

**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தரம் 5 க்கான புலமைப்பரிசில் வகுப்பு நடைபெறுகின்றது. (81739)


# கணக்காய்வுப் பரீட்சகர் போட்டிப் பரீட்சை நாளை

யாழ்ப்பாணம்.டிசெ.16

இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தால் நடத்தப்படுகின்ற கணக் காய்வுப் பரீட்சகர் சேவை தரம் II க்கு நியமனம் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமையும், எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளிலும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கென யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் 3 பரீட்சை நிலையங்களும், யாழ். இந் துக் கல்லூரியில் 2 பரீட்சை நிலை யங்களும்., யாழ். மத்திய கல்லூரி யில் 2பரீட்சை நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

இவர்களுக்கான அனுமதி அட் டைகள் ஏற்கனவே அனுப்பி வைக் கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ-10)

## கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில்

# வீடுகளில் இருந்த சுவாமிப் படங்கள் ஒன்றாக ஒரு வீட்டில் காட்சி!

அரியாலை,டிசெ.16

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்ற ஒருவர் வீட்டினுள் பெரும் எண்ணிக்கையான சுவாமிப் படங்கள் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இந்தப் பகுதிகளில் இருந்து கடந்த மே மாதம் மக்கள் வெளியேறி இருந்தனர்.தற்போது வீடுகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்பட் டதை அடுத்துப் பலரும் தங்கள் வீடுகளைச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.இவ்வாறு வளன்புரம் பகுதிக்குச் சென்ற ஒருவரே தனது வீட்டில் பெரும் எண்ணிக்கையான சுவாமிப படங்கள் ஒன்றாக வைக்கப் பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்.

அந்தப் பகுதிகளில் உள்ள வீடு களில் இருந்த சுவாமிப் படங்களே இவ்வாறு ஒரே வீட்டில் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. (ஐ-17)

# டெங்குக் காய்ச்சல் அறிகுறியுடன் மற்றொரு நோயாளி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,டிசெ.16

டெங்குக் காய்ச்சல் எனச் சந்தே கிக்கப்படும் மேலும் ஒரு நோயாளி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற் றுவருகிறார்.

கொக்குவில், பொற்பதி வீதி யைச் சேர்ந்த இராசேந்திரம் துவே னிகா (வயது12) என்ற சிறுமியே இந்நோய்க்காளாகி இருப்பதாகச் சந் தேகிக்கப்படுகிறது.

காய்ச்சல் எனக் கடந்த 12ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்ட இவருக்கு தற்போது டெங்குக்கான அறிகுறிகள் காணப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இவரது இரத்த மாதிரி டெங்குப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

இவருடன் டெங்குக் காய்ச்சல் உள்ளவர் எனச் சந்தேகிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை 7ஆக உயர்ந்துள்ளது.இதில் ஒருவரின் இரத்தப் பரிசோதனை மட்டும் டெங்கு என உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.ஏனையோரின் பரிசோதனை அறிக்கைகள் இன்னமும் வந்து சேரவில்லை. (இ-15-139)


### இணுவை தந்த செல்வங்களை வாழ்த்தி மகிழ்கின்றோம்

க.பொ.த. (உ/த) 2000 பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற

| | | |
|---|---|---|
| அ. கிரிதரன் | முகாமைத்துவம் | 4A |
| பா. தர்சன் | பொறியியல் | |
| தெ. ஆனந்தன் | பொறியியல் | |
| அ. அனந்தன் | பொறியியல் | |
| கஜேந்திரன் | மருத்துவம் | |
| வே. நிறஞ்சலா | முகாமைத்துவம் | 4A |
| து. ஜெக்குமார் | கலை | 2A,B.C |
| ம. ஜெயக்காந்தன் | கலை | 2A,B,C |
| அ. கலைமதி | கலை | A,2B |

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி நண்பர்கள்

(C/14322)



### BAIRAHA FARM கோழி இறைச்சி விற்பனைக்குண்டு

BAIRAHA FARM இன் சுத்தம் செய்யப்பட்ட கோழி இறைச்சி, CHICKEN SAUSAGES, MEAT BALLS என்பன விற்பனைக்குண்டு.

வரணி மிசன் பண்ணை விற்பனை நிலையம், 145, நவீன சந்தை யாழ்ப்பாணம். (81744)



### மரண அறிவித்தல்

**ஐ.கிருஷ்ணபிள்ளை**

(உரிமையாளர், ஸ்ரீதிலகா பாதணி விற்பனை நிலையம் - நெல்லியடி)

நெல்லியடியைச் சேர்ந்த ஐ.கிருஷ்ணபிள்ளை நேற்று 2000.12.15 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி கி.ருக்மணியின் அன்புக் கணவரும் திருமதி திலகராணி மகேஸ்வரன் (நடன ஆசிரியை, கொழும்பு), திருமதி சாமினி ரவீந்திரநாதன் (வவுனியா), செல்வி கி.சந்திகா (நெல்லியடி ம.ம.வி.) ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று சனிக்கிழமை (2000.12.16) பி.ப. 4.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரிவைகள் ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:

*'ஸ்ரீதிலகா', வதிரி.* (C/14321) தி.வரதராசன்(பெறாமகன்) *கிராம அலுவலர்.*

## சிரேஷ்ட சாரணியர் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

சிரேஷ்ட சாரணியருக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு சிரேஷ்ட சாரணியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## வள்ளங்கள் எரிப்பு

கொழும்பு,டிசெ.16

வாழைச்சேனை வாவிக்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 வள்ளங்கள் இனந்தெரியாத சிலரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.(இ-6)

## ராகிங்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கிக் கல்வி பயின்றுவந்த பிரஸ்தாப மாணவனை சிரேஷ்ட மாணவர் ஒருவர் தனது அறைக்கு அழைத்துச் சென்றதாகவும் -

அங்கு வைத்து தாக்கிச் சித்திரவதை செய்ததாகவும் -கூறப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தால் உடல் நோவுக்குள்ளான பிரஸ்தாப மாணவன் நேற்றுக் காலை மயங்கி வீழ்ந்ததை அடுத்து அவரைப் பெற்றோர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர் என்று சொல்லப்பட்டது.

அதேசமயம் குறிப்பிட்ட சிரேஷ்ட மாணவனின் அறைக்குச் சென்ற பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தையும், சகோதரனும் அவரை எச்சரித்ததாகவும் கூறப்பட்டது.(இ-3-5-6-10)

## இடம்பெயர்ந்தோர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீளாய்வு செய்வதற்கான படிவங்கள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டிருப்பதாகவும் -

இப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் நிவாரணம் பெறும் குடும்பங்களின் நிலை தொடர்பாக கிராம அலுவலர்கள், அப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று பரிசீலனை செய்து அக்குழு சிபார்சு செய்யும் குடும்பங்களுக்கே எதிர்காலத்தில் நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட இருப்பதாகவும் - தெரியவருகிறது.

தீவகம் மற்றும் வலி.வடக்குப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்கள் பலவும் தற்போது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள போதும் அங்கு செல்லாது தொடர்ந்து வேறு இடங்களிலே தங்கி இருந்து நிவாரணம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வேறு சிலர் இடம் பெயர்ந்து தங்கி வாழும் இடங்களிலேயே காணிகள், வீடுகளைக் கொள்வனவு செய்து அவ்விடங்களிலே நிரந்தரமாக வசிப்பதுடன் தொடர்ந்தும் நிவாரணம் பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

மீளாய்வுப் பணிகளின் போது இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதுடன் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வருமானம் தரும் தொழில்களில் ஈடுபட்டிருப்போர், வாகனங்களை சொந்தமாக வைத்திருப்போர் ஆகியோரது நிவாரணம் தொடர்பாகவும் பரிசீலிக்கப்படும் எனத் தெரிகிறது. (ஜ-86)

## ஆலயங்களில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரத்தில் இருந்து சைவ ஆலயங்கள்,தேவாலயங்களில் அதிகாலை வேளை மணி ஒலிக்க தடைவிதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்தத் தடை தொடர்பாக யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசியதையடுத்து இந்தத் தடைநீக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-173)

## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.வி.குகேந்திரன் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்தே இந்தப் பணிப்புரையை அவர் விடுத்துள்ளார்.

அதேசமயம் -இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் திடீர் பரிசோதனைக் குழுக்களை உடனடியாக அனுப்பி விவரமான அறிக்கை ஒன்றைத் தருமாறு குகேந்திரன் யாழ்.அரச அதிபரைக் கேட்டுள்ளார். (இ-3-173)

## புலிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினார்.

ஜஸ்வந்சிங்குடன் நடத்திய பேச்சுக்களின் விடயங்கள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர். ஜஸ்வந்சிங்கும் உடனிருந்தார்.

இரு தரப்புக்கும் இடையில் இடம பெற்ற பேச்சுக்கள் தொடர்பான உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும நேற்றிரவுவரை வெளியாக வில்லை.

## புலிகளிடம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறையில் செஞ்சிலுவை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அங்கு இருந்து படகு மூலம் சடலத்தை எடுத்துச் சென்ற செஞ்சிலுவை அதிகாரிகள் கல்முனையில் வைத்து விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர். இந்தச் சடல ஒப்படைப்பு நேற்று முன்தினம் இடம் பெற இருந்தது தெரிந் ததே.

## அரசு தம்முடன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அமைச்சரவையில் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை. அந்தச் செய்தி ஆதாரமற்றதொன்றாகும்.

சமாதான நடவடிக்கைகளைச் சீர்குலைப்பதே இந்தச் செய்தியின் நோக்கமாகும்.

சமாதானப் பேச்சுத் தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த விமர்சித்தது உண்மைதான். அந்தப் பேச்சை எவ்வளவு ஆக்கபூர்வமானதாக மேற்கொள்ளலாம என்பது குறித்தே அவர் தெரிவித்தார்.

இதையடுத்து இந்த விடயம் குறித்து அமைச்சர்கள் ஆராய்ந்தனர். வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் உடனிருந்தார்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அமைச்சரவையில் எந்தவிதமான அபிப்பிராயபேதமும் கிடையாது.

பேச்சுவார்த்தை நடக்கும் அதே சமயம் யுத்தமும் நடக்கும் என்ற கொள்கையையே அரசாங்கம் கொண்டுள்ளது.

இப்படி அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க கருத்து வெளியிடுகையில், விடுதலைப்புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பது என்ற நிலைப்பாட்டை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்டுள்ளார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய குழு மற்றும் முன்னணியின் அதி உயர் பீடம் ஆகியவற்றில் விரிவாக ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு இதுவாகும்.

பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்கள் பங்கு பற்றி இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கும் விடயத்தில் 'பந்து' இப்போது புலிகள் பக்கமே உள்ளது - என்றார். (இ-3-6)


### விஷேட அன்னதானம்

அமரர் **பொன்னையா ஆறுமுகம்** நினைவாக இன்று (16-12-2000) சனிக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை ஆச்சிரமத்தில் விசேட அன்னதானம் இடம்பெற இருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

– குடும்பத்தினர்.

(81694)

இந்துநாகரிகம்
இந்துசமயம்
காரை.S.கெங்கா
**A/L 2001 DAY CLASS**
வாரத்தில் 05 மணி நேரம் நடைபெறுகிறது.
*A/L 2002*
வகுப்புகளும் நடைபெறுகின்றன.
**BEACON**
(வெலிங்டன் சந்தி, யாழ்.)
(C/14304)

நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்
**A/L 2000 & 2001**
அலகு ரீதியான மீட்டல் வகுப்புகள்
Acc. - திரு.தவா B.St. - திரு.முரலி
Eco. - திரு.சண்
ஆரம்பம்: 18.12.2000 திங்கள் காலை 8.00 மணி
(81721)

சுடர் ஒளி 17.12.2000 இதழில்



பாபா மீது அவதூறு
அசிங்கமான குற்றச்சாட்டு
இந்திய சஞ்சிகையில் பச்சைத் தூஷணம்!
வீரப்பன் இலங்கையில்?
பிரபா – மணி தொடர்புகள்
சூடான அரசியல் ~ சுவையான அம்சங்கள்
சுடர் ஒளி

**STP Computer World**
No: 54A, Palaly Road, Kantharmadam, Jaffna.

மாணவர்களே!

- தகவல் தொழில்நுட்ப புரட்சியில் சுழலும் இன்றைய உலகினை எதிர்கொள்ள நீங்களும் தயாரா?
- பாடசாலை மாணவர் மத்தியில் கணனி அறிவை மேம்படுத்தும் எமது திட்டங்களில் இன்றே இணைந்து கொள்ளுங்கள்!

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

INFORMATION TECHNOLOGY FOR SCHOOL STUDENTS

பிரிவு 1 : 10 தொடக்கம் 14 வயது வரையான மாணவர்களுக்கு
பிரிவு 2 : 15 தொடக்கம் 18 வயது வரையான மாணவர்களுக்கு
ஆரம்பம் 17-12-2000 & 20-12-2000 காலை 9.00 மணி

குறிப்பு : வசதி குறைந்த மாணவர்களின் பெற்றோர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

DIRECTOR


### மரண அறிவித்தல்

**காசிப்பிள்ளை இராஜசுந்தரம்**

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட காசிப்பிள்ளை இராஜசுந்தரம் நேற்று (15.12.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம், துரைச்சாமி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கைலாசபிள்ளையின் மைத்துனரும், யோகரத்தினம், தருமரத்தினம், அமுதரத்தினம், பஞ்சரத்தினம், சுகிர்தரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகசபாபதி, தனபாலசிங்கம், மகேந்திரன், புவனராணி, விலாசினி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.12.2000) சனிக்கிழமை மாலை 3:00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*'யோகஸ்தி'*
*மானிப்பாய் தெற்கு,*
*மானிப்பாய்.*
***T.P.2556***

தகவல் :
க. பஞ்சரத்தினம்
(மருமகன் - மாப்பியன் மில்)

(C/14323)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.